ஞானத்தின் முத்துக்கள்
ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்கள்
பக்கம் 3

இஸ்லாம் முன்வைக்கும் தூய ஓரிறைக் கொள்கை (தொடர்ச்சி...)
பக்கம் 8

இஸ்லாமிய பர்தா (தொடர்ச்சி...)
பக்கம் 13

700 இறை கட்டளைகள் (தொடர் – 7)
பக்கம் 17



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | February 2024 | Vol. 3 - Issue No. 3


Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


## முஸ்லிஹ் மவ்வூது
## (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி)


HOSHIARPUR

இது வெறும் முன்னறிவிப்பு அல்ல. வானத்தின் மகத்தான அடையாளமாகும். அதனை கண்ணியத்திற்குரியவனும் வல்லமைமிக்கவனுமாகிய இறைவன் நமது நபி கரீம் ரவூஃபுர் ரஹீம் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக அனுப்பினான்.

– ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை).

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 114–115 பிரசுரம் 22 மார்ச் 1886)



# திருக்குர்ஆன்

وَلَا تَقۡفُ مَا لَيۡسَ لَكَ بِهِۦ عِلۡمٌۚ
إِنَّ ٱلسَّمۡعَ وَٱلۡبَصَرَ وَٱلۡفُؤَادَ كُلُّ أُوْلَٰٓئِكَ
كَانَ عَنۡهُ مَسۡـُٔولٗا

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவையெல்லா -வற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ،
عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ:
لَا يُلْدَغُ الْمُؤْمِنُ مِنْ جُحْرٍ وَاحِدٍ
مَرَّتَيْنِ - (صَحِيحُ الْبُخَارِيِّ كِتَابُ الْأَدَبِ)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு நம்பிக்கையாளர் ஒரு பொந்தில் இருமுறை கடிபடமாட்டார்.” (புகாரி கிதாபுல் அதப்)

# ஞானத்தின் முத்துக்கள்

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்கள்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 7 ஜுலை 2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...

தமிழாக்கம்: மவ்லவி M. ரஃபீக் அஹ்மது

இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய மேற்கோள்களிலிருந்து சில விஷயங்களை எடுத்து வைப்பேன். ஒவ்வொரு மேற்கோளும் தனித்தனியானது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு போதனை மற்றும் பாடத்தைக் கொண்டதும் ஆகும். சில கருத்துக்களை அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சான்று காட்டிக் கூறியுள்ளார்கள். முதல் விஷயம், தப்லீக் சம்பந்தமானது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காதியான் ஜமாஅத்திற்கு ஆண்டு மாநாட்டின் போது ஒரு தூதுச் செய்தி அனுப்பியிருந்தார்கள். அதில் நீங்கள் தப்லீக் செய்ய வேண்டும் என்று கவனமூட்டி -னார்கள். இந்த விஷயத்தில் மிகவும் கவனம் தேவைப்படுகிறது. சந்தேகமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் 'நான் உமது தப்லீகை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்' என்று இல்ஹாம் மூலம் அறிவித்திருந்தான்.

(அல் ஹகம் 27 மார்ச், 6 ஏப்ரல் 1898 தொகுதி 2, பக்கம் 13, எண்.5-6)

பிறகு மேலும் அல்லாஹ் இவ்வாறும் கூறினான்: உமது பெயரை இறைவன் இவ்வுலகம் துண்டிக்கப்படும் வரை கண்ணியத்துடன் நிலை நிற்கச் செய்வான். உமது அழைப்பை உலகின் எல்லை வரை கொண்டு சேர்ப்பான். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 648)

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தப்லீகையும் அவர்களது அழைப்பையும் அவர்களது பெயரையும் உலகின் எல்லை வரை கொண்டு சேர்ப்பதாக வாக்குறுதி வழங்கி -யுள்ளான். இந்தப் பணியை அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப நிறைவேற்றவும் செய்தான். வருங்காலத்திலும் இறைவன் செய்வான். ஆனால் அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கும் தப்லீகின் பக்கம் கவனமூட்டி -யுள்ளார்கள். எனது நூலிலிருந்து அதனைத் தெரிந்து கொள்ளவும் செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபிகள் தப்லீக் செய்தது போன்று தப்லீகும் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வின் வாக்குறுதியிலிருந்து முழுமையாகப் பங்கு பெறுவதற்குக் கூட முயற்சி செய்ய வேண்டியதிருக்கிறது. நிச்சயமாக, அல்லாஹ்வின் வாக்குறுதி இருக்கிறதுதான். அல்லாஹ் கூட இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக நபியிடம் பைஅத் செய்தவர்களிடம் பொறுப்பை சுமத்தியுள்ளான். தீவிரமாக அதில் பங்கெடுத்து இறைவனின் அருளுக்கு வாரிசாகுமாறு கூறியுள்ளான். பிறகு இவ்வாறும் நடக்கிறது. அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப இவர்களின் பணிகளில் அளவற்ற பரக்கத்துகளையும் வழங்குகிறான். புதிய புதிய வழிமுறைகளை உருவாக்குகிறான். அல்லாஹ் எவ்வாறு தப்லீகிற்காக பல்வேறு வழிமுறைகளை உருவாக்குகிறான் என்பதையும் பார்த்து வருகிறோம். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய மேற்கோளில் இருந்து தப்லீக் சம்பந்தமான பகுதியை எடுத்து வைக்கிறேன்.



அதில் அப்போது காதியானில் அஹ்மதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் ஓர் எல்லைக்குட்பட்ட வசதி வாய்ப்புகளே இருந்த நிலையிலும் கூட இந்த முக்கியமான கடமையின் பக்கம் அவர்கள் கவனமூட்டினார்கள். தர்வேஷ்களுக்கு தைரியமூட்டவும் செய்தார்கள். தைரியமூட்டுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆரம்ப காலத்தின் சான்றுகளை எடுத்து வைத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தர்வேஷ்களை விளித்து கூறுகின்றார்கள்: நிச்சயமாக உங்களது எண்ணிக்கை காதியானில் 313 பேர். ஆனால், ஒரு விஷயத்தை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானில் அல்லாஹ் கூறிய பணியைத் தொடங்கிய போது காதியானில் அஹ்மதிகளின் எண்ணிக்கை இரண்டு மூன்றாகவே இருந்தது. முந்நூறு பேர் நிச்சயமாக மூன்று பேரை விட அதிகமானவர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதத்தின் காலத்தில் காதியானின் மக்கள் தொகை ஆயிரத்து நூறு பேர் ஆகும். 1100 பேர் என்பது மூன்று பேருடன் ஒப்பிடும் போது 366 பேருக்கு ஒருவர் என்ற விகிதாச்சாரமாகும்.

இந்த தூதுச் செய்தி அனுப்பும் போது அன்னார் கூறுகின்றார்கள்: இப்போது காதியானின் மக்கள் தொகை பன்னிரெண்டாயிரம் என்று வைத்துக் கொண்டால் கூட தற்போது இருக்கிற அஹ்மதிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது 36 பேருக்கு ஒருவர் அஹ்மதியாக இருப்பதாகப் பொருள்படும். முதலில் 36 பேருக்கு ஒருவர் தான் அஹ்மதியாக இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பணியைத் தொடங்கிய போது அவர்களுக்கு இருந்த பலத்தை விட இப்போது

அஹ்மதிகளுக்கு அங்கிருப்பவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது உள்ள பலம் பத்து மடங்கு அதிகமாகும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பணியைத் தொடங்கிய போது காதியானுக்கு வெளியில் எந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இருந்ததில்லை. இப்போது இந்தியாவில் கூட பல ஜமாஅத்துகள் நிலைநாட்டப்பட்டுள்ளது. இந்த ஜமாஅத்துகளை விழிப்பூட்டி ஒழுங்குபடுத்துவது புதிய உறுதியுடன் நிற்க வைப்பது, இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தப்லீகை இந்தியாவில் நாலாபுறமும் பரப்பும் நோக்கில் ஆற்றல்களை ஒன்று திரட்டுவது, உங்களது பணியேயாகும்.

(சவானிஹ் ∴பஸ்லே உமர் தொகுதி 4, பக்கம் 388-389)

இப்போது இதே ஒப்பீட்டை செய்யும் போது காதியானின் அஹ்மதிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உள்ளது என்றால் அத்துடன் அங்குள்ள மக்கள் தொகையும் அதிகரித்–திருக்கும். வசதிவாய்ப்புகளும் முன்னரை விட அதிகமாகும். நமது வசதி வாய்ப்புகள் அல்லாஹ்வின் அருளால் மிகவும் அதிகமாக உள்ளன. அல்லாஹ்வின் அருளால் இந்தியாவின்



ஜமாஅத்தின் அறிமுகமும் பல்வேறு வழியில் நடக்கின்றது. பணியில் இருக்கும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள், முரப்பிமார்கள் தனிப்பட்ட முறையிலும் தமது முயற்சியை தீவிரப்படுத்த வேண்டும். அடிபடவும் வேண்டியது ஏற்படுகிறது. எதிர்ப்புகளும் வருகின்றன. இவையெல்லாம் இருந்தும் நாம் நுட்பமான ஞானத்துடன் தப்லீகின் பணிகளை மேம்படுத்த வேண்டும் – இன்ஷா அல்லாஹ். உலகின் மற்ற பகுதியிலுள்ள மக்களும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தப்லீகின் பணியைச் செய்யுமாறும் அதனை விரிவுபடுத்துமாறும் வழிகாட்டி–யுள்ளான். இது திருக்குர்ஆனின் கட்டளையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இறைவன் கட்டளை இட்டிருந்தான். ஆனால், நாம் இதற்காக மிக உறுதியான திட்டத்தை ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் வகுப்பது அவசியமாகும். அதன் மூலமே இப்பணியை மேலும் விரிவுபடுத்த முடியும். பிறகு தப்லீக் செய்வதுடன் பைஅத் செய்து இணைகின்ற அம்மக்களைப் பாதுகாப்பதும் ஒரு முக்கியமான பணியாகும். சில இடங்களில் தப்லீக் நடக்கிறது. மக்கள் இணையவும் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பாதுகாப்பதில்லை. பிறகு, வந்தவர்களுள் பெரும்பாலார் வீணாகி விடுகின்றனர். இந்தியாவில் அதிக அளவில் ஏழை மக்கள், கிராமப்புற மக்கள் பைஅத் செய்கின்றனர். எதிர்ப்புகள் வந்தவுடன் சில பலவீனமான ஈமான் உள்ளவர்கள் அச்சத்தால் பலவீனம் காட்டுவதற்கு தொடங்கி விடுகின்றனர். நமது ஜமாஅத் அமைப்பினர், திட்டமிடுபவர்கள் எவ்வாறு தப்லீக் பணிகளில் திட்டமிட்டுச் செய்கிறார்களோ அங்கு அல்லாஹ்வின் அருளால் மிக நல்ல பணிகள் நடக்கின்றன. அது தவிர இஸ்லாஹ்–வ–இர்ஷாதின் ஒரு பிரிவாகிய நூருல் இஸ்லாமும் தப்லீக் பணிகளை அதன் பல்வேறு வழிமுறைகளின் மூலம் செய்து வருகின்றது. இதைத் தவிர வக்ஃபே ஜதீதின் நிஸாமத்தே தப்லீக் மூலமாகவும் பணி நடக்கின்றது. அதைப் போன்று வக்ஃபே ஜதீது துறையின் மூலமாகவும் பணிகள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் எதிரிகள் சென்று புதிய அஹ்மதிகளை, புதிதாக பைஅத் செய்தவர்களைத் தொந்தரவு செய்ய முயற்சி செய்கிறார்கள். அப்பகுதிகளுக்குச் சென்று புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு தைரியமூட்ட வேண்டும். மாவட்ட மற்றும் தலைமையகப் பிரதிநிதிகளும் எங்கிருந்தாவது ஓர் அஹ்மதிக்கு ஏதாவது துன்பமிழைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தால் அது ஒரு சிறிய ஊராக இருந்தாலும் சரி அங்கு உடனே செல்ல வேண்டும். அதுபோன்று ஆப்பிரிக்க நாடுகளிலும் அங்குள்ள முபல்லிக்மார்கள் பிறகு ஏற்பட்ட தொடர்புகளை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உள்ளூர் மக்களின் நிலையை அறிந்து கொள்வதற்காக சிறந்த முறையில் திட்டமிடுதல் வேண்டும். நான் ஏற்கனவே தர்ஸிலும் அநேகமாக குத்பாவிலும் குறிப்பிட்டிருந்தேன். அஹ்மதிய்யத்தின் எதிரிகள், இவர்களை எவ்வாறு அஹ்மதிய்யத்திலிருந்து வெறுக்க வைக்கலாம் என்று உடன் செல்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், எல்லா இடத்திலும் குறிப்பாக அதிகமாக பைஅத் நடக்கின்ற இடங்களில், பணிகள் வேகமாக நடைபெறுகின்ற ஏழை நாடுகளில் நாம் இதனைச் செய்ய வேண்டும். பிறகு ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அது காஜா கமாலுத்தீன் சாஹிப் தொடர்பானதாகும். அவர் இரண்டாவது கிலாஃபத்தின் தேர்தல் நடைபெற்ற போது குழப்பத்தால் பீடிக்கப்பட்டு பைஅத் செய்யாதவர்களின் தலைவர்களுள் ஒருவராகி விட்டார். தலைமையே அவருக்கு வேண்டியிருந்தது. எப்படியாவது அது அவருக்கு கிடைத்து விட்டது. அவரைப் பற்றி அவர் எவ்வாறு தமது அறிவை வளர்த்துக் கொண்டார்? அவரது சிறந்த சொற்பொழிவுகள் பேச்சுகளின் இரகசியம் என்னவாக இருந்தது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா கமாலுத்தீன் சாஹிபுடைய வெற்றிக்கு பெரும் காரணம் என்னவெனில், அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது நூல்களைப் படித்து லெக்சர்களைத் தயார் செய்பவராக இருந்தார். பிறகு காதியான் வந்து சிலவற்றை ஹஸ்ரத் முதல் கலீஃபாவிடம் கேட்பார். சிலவற்றை வேறு சிலரிடம் கேட்பார். இவ்வாறு ஒரு முழுமையான லெக்சர் தயார் செய்வார். பிறகு அதனை எடுத்துக் கொண்டு இந்தியாவில் பல்வேறு நகரங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்வார். இதனால் நல்ல வெற்றியைப் பெற்றார்.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா கமாலுத்தீன் கூறி வந்தார். ஒரு பன்னிரெண்டு லெக்சர் ஒருவரிடம் இவ்வாறு ஆயத்தம் செய்யப்பட்டவை கிடைத்தால் அவர் அசாதாரண பிரசித்தி பெற முடியும். மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காஜா சாஹிப் ஏழு சொற்பொழிவுகளைத்தான் ஆயத்தம் செய்திருப்பார். அதற்குள் இங்கிலாந்து சென்று விட்டார். அந்த ஏழு சொற்பொழிவுகளி–னாலேயே பெருமளவில் மக்களிடம் வரவேற்பைப் பெற்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு லெக்சர் மட்டும் தயார் செய்து கொண்டு அது நன்றாக நினைவிலும் இருக்கும் என்றால், நல்ல தாக்கம் ஏற்பட முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதலில் எழுதிய முப்பது புத்தகங்கள் உள்ளன. அவற்றை படிப்பது அவசியமாகும். பிறகு அதனைப் புரிந்து அதிலிருந்து சொற்பொழிவைத் தயார் செய்ய வேண்டும். சற்று விரிவாக விளக்கி விட்டு தொடர்ந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவ்வாறு அரபி இலக்கணங்களுக்கு தனியாக ஆசிரியர் இருந்தார். பிறகு இப்போது இன்னொரு காலம் வந்தது. விஞ்ஞானம் முன்னேற்றத்தைப் பெற்றது. எல்லாவற்றிலும் Specialization, Speciality செய்யும் காலம் தொடங்கி விட்டது. இவ்வாறு சொற்பொழிவாளரும் கூட கருத்துக்களை நன்றாக ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். அதனையே வெளியில் சென்று சொற்பொழிவாக வழங்க வேண்டும். இயக்கத்தின் நோக்கங்கள் தொடர்பாக அந்த சொற்பொழிவுகள் இருக்கும் எனில் நாம் இங்கிருக்கும்போதே அவர்கள் என்ன பேச வேண்டும் என்பது நமக்குத் தெரிய வரும். உள்ளூரின் தேவையை அறிந்து பேசுவதே அசல் சொற்பொழிவாகும். அதற்கு ஆதரவாக உள்ள சில கருத்துக்களையும் பேசலாம்.

(அல் ∴பஸ்ல் 7 நவம்பர் 1945, தொகுதி 33, எண்.261, பக்கம் 3)

இந்த வழிகாட்டல் விதிமுறைகள் முபல்லிக்குகளுக்கும் பொருந்தும். அல்லாஹ்வின் வழியில் அழைப்பவருக்கும் பொருந்தும். அதே போன்று அறிவுசார்ந்த நிகழ்ச்சிகளுக்கு செல்பவர்களுக்கும் பொருந்தும். இவ்வாறு சொற்பொழிவு தயாரிக்கப்பட்டிருந்தால் பெரும் பெரும் பேராசிரியர்கள் பெயர்தாங்கி மார்க்க அறிஞர்கள் மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் கூட தாக்கத்திற்கு உள்ளாவார்கள். கடந்த நாட்களில் இங்கும் ஒரு நிகழ்ச்சி இருந்தது. தப்லீக் பிரிவின் கீழ் இருந்து நடந்திருக்கலாம். அதில் இஸ்ரேலிலிருந்து ஒரு பெரிய யூதர் கலந்து கொண்டார். அவர் பல நூல்கள் எழுதியவராவார். அங்கு நமது ஒரு முரப்பியும் நல்ல ஆயத்தம் செய்து கொண்டு வந்து ஒரு சொற்பொழிவாற்றினார். பேராசிரியர் மிகவும் எச்சரிக்கையுடன் இஸ்லாமிய கிலாஃபத் சம்பந்தமாக சில விஷயங்களைப் பேசினார். பிறகு இஸ்லாத்திற்கு எதிராகவும் பேசினார். நமது இந்த இளைஞர் அதற்கு மிக நல்ல முறையில் பதில் தந்தார். பிறகு அந்தப் பேராசிரியர் என்னை சந்திக்கவும் வந்தார். அங்கு நியமிக்கப்பட்டுள்ள உங்கள் முரப்பி மிகவும் தந்திரமாக செயல்படுபவர் என்று கூறினார். உள்ளபடி இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்கள் அஹ்மதி அல்லாதவர்களின் சில கருத்துக்களைக் கூறி அதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள் அல்லது அவர்களிடம் ஆதாரங்கள் இருப்பதில்லை. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் தரப்பட்ட அவர்களது நூலிலுள்ள அறிவுகள் எத்தகையது எனில் நல்ல முறையில் சொற்பொழிவை தயார் செய்திருந்தால் எவரது வாயையும் அடைத்து விடலாம். அவர்களுக்கு முன்னால் எவரும் நிற்க இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பதும் நமக்கு அவசியமாகும். அதனால் நமது மார்க்க அறிவும் அதிகமாகும். அத்துடன் அந்த நூல்களால் நமது ஆன்மிக முன்னேற்றமும் ஏற்படும்.

பழைய மக்களுக்கு எந்த அளவுக்கு தப்லீகில் ஆர்வம் இருந்தது என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: நான் சிறியவனாக இருந்தேன். அப்போது எனது சிறு வயது நண்பர்களுடன் சேர்ந்து ஓர் அஞ்சுமனை நிறுவினோம். மேலும் 'தஷ்ஹீஸுல் அஸ்ஹான்' என்ற பத்திரிகையை நாங்கள் வெளியிட்டோம். அப்போதைய எனது நண்பர்களுடன் சவுத்ரி ஃபத்ஹ் முஹம்மத் சாஹிப் ஸியால் அவர்களும் இருந்தார்கள். பிறகு அவர் இங்கு முபல்லிக்காக இருந்தார். அதாவது U.K - வின் முபல்லிக்காக இருந்தார். அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களின் மகள் சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிபின் வீட்டில் இருந்தார்கள். (சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிபோடு திருமணம் முடிந்திருந்தது. சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப், சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடைய இளைய சகோதரராவார்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் உடைய மனைவி என்னிடம் கூறினார். தந்தையாரை (அதாவது ஃபத்ஹே முஹம்மது சியால் அவர்களை) நீங்கள் நாஸிர் அஃலா ஆக்கியபோது (ஒரு காலத்தில் சத்ர் அஞ்சுமனின் நாஸிர் அஃலாவாகவே அவர் ஆக்கப்பட்டிருந்தார்.)

அவர் வீட்டில் மிகவும் ஆதங்கப்படுவார். நாம் தப்லீகிற்காக நம்மை வக்ஃப் செய்தோம். இப்போது நம்மை நாற்காலியில் கொண்டு வந்து அமர்த்தி விட்டார்கள் என்று கூறுபவராக இருந்தார். இன்னொருபுறம் நான் பார்க்கிறேன். நமது ஜமாஅத்தில் இத்தகைய சிலரும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களை மதிக்க வேண்டும் என்று எனக்கு எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

(அல் ∴பஸ்ல் 22 அக்டோபர் 1955, தொகுதி 44/9, எண்.247, பக்கம் 6)

பழைய மக்களிடம் தப்லீகின் மீது இருந்த ஆர்வமும் கூட ஒரு பாடமாக நமக்குக் கிடைக்கிறது. அவர்களிடம் தப்லீகிற்கான ஆர்வம் எவ்வளவு இருந்தது என்பதை அறிய முடிகிறது. அவர்களை அலுவலகங்களில் நாற்காலியில் அமர வைத்தால் கூட அதனை விட தப்லீகிற்கு முதன்மை தருபவர்களாக இருந்தனர். இதனைத் தவிர இக்காலத்தில் இங்கு சிலர் இருக்கிறார்கள். எம்மை தலைமையகத்தில் அமர்த்துங்கள் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர். இதனைத் தவிர இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். முரப்பிகள் முபல்லிக்மார்கள் ஆகியோரை ஜமாஅத் எவ்வாறு பார்க்க வேண்டுமோ அவ்வாறு பார்க்கப்படுவதில்லை. ஜமாஅத் சகோதரர்கள் தமது முபல்லிக்குகள் முரப்பிகளை எந்த அளவுக்கு கருத்தில் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குக் கருத்தில் கொள்வதில்லை. இதுபற்றி சில இடங்களில் புகார்கள் வருகின்றன. ஆனால் இத்துடன் இன்னொரு விஷயத்தையும் நான் கூறுவேன். முரப்பிமார்கள், முபல்லிக்மார்களுக்கும் ஒரு பொறுப்பும் இருக்கிறது. இவ்விஷயம் அவர்கள் மீதும் ஒரு பொறுப்பை சுமத்துகிறது. அவர்கள் ஜமாஅத்துகளில் தமது கண்ணியத்தை நிலைநாட்டுவதற்கு அறிவு மற்றும் ஆன்மிக தரத்தின் உயர் நிலையை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் விளைவாக அவர்கள் மீது ஜமாஅத்திலுள்ள எந்தவொரு நபருக்கும் அவர்களைப் பற்றி எந்தவொரு தவறான வார்த்தையும் பேசுவதற்கு வாய்ப்பே ஏற்படக் கூடாது. சில இடங்களில் சில ஜமாஅத் நிர்வாகத்தில் இருப்பவர்கள் முரப்பிமார்களைப் பற்றி தவறான வார்த்தைகளைக் கூறி விடுகிறார்கள். எங்காவது முரப்பிகள் சீர்திருத்துவதற்காக முயற்சி செய்யும் போது அவர்களுக்கு எதிராக பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.

பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் இரகசியம் என்னவென்பது பற்றியும் அதன் ஹிக்மத்தைக் கூறியவாறும்



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தவோர் அடையாளத்தையும் காட்ட வந்தார்கள் என்றால் தமது துஆவினால் உலகில் பெரும் பெரும் புரட்சிகளை ஏற்படுத்தக் கூடிய அடியார்களை உருவாக்குவது அவர்களது வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முழு உலகமும் செய்ய முடியாததை ஒரு துஆ செய்ய முடியும். இதனால் அல்லாஹ் எல்லா துஆக்களையும் ஒப்புக் கொண்டு விடுகின்றான் என்றும் பொருளில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகனார் சாஹிப் ஸாதா முபாரக் அஹ்மது சாஹிப் வஃபாத் ஆனார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் வஃபாத் ஆனார்கள். சாஹிப் ஸாதா முபாரக் அஹ்மது சாஹிபிற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் துஆவும் செய்திருந்தார்கள். அதுவும் அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். ஏனெனில் அவரது மரணத்தைக் குறித்து குறித்த நேரத்திற்கு முன்பே அன்னார் கூறி இருந்தார்கள். ஒரு விஷயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக கூறப்பட்டால் அதுவும் ஓர் அடையாளமாகி விடுகிறது. அது அல்லாமல் எல்லா துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுவதுமில்லை. எல்லா துஆக்களும் மறுக்கப்படுவதுமில்லை. ஆயினும், துஆவை ஒப்புக் கொள்வதற்கு இறைவன் முடிவு செய்து விட்டால் அது கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. அதனை வேறு எவரும் ரத்து செய்ய முடியாது.

பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவது தொடர்பாக லாஹூரிகளின் ஓர் ஆட்சேபனைக்கு, அதாவது முஸ்லிஹ் மவ்வூது பற்றி என்ன அடையாளம் நிறைவேறியது என்ற ஆட்சேபனைக்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இறங்கிய இறை அருள் தொடர்வதும் அவசியமானதாகும். (உங்கள் மூலமாக இது தொடராது என்று கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதுதான் – அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றி) என் மூலமாக இது தொடராது என்று வேண்டுமானால் நீங்கள் கூறலாம். ஆனால் எனக்கு எதிராக அவர்கள் தமது இமாம் அல்லது தலைவரை எடுத்து வைக்க வேண்டும். அவர் மூலமாக அந்த அருள்கள் தொடர்கின்றன என்று கூற வேண்டும். இது மிகவும் அவசியமாகும். உண்மையிலேயே வருங்கால விவகாரங்களைக் குறித்து இறைவன் வெளிப்படுத்துகின்றான் என்றாலோ, அசாதாரண முறையில் ஒருவரின் துஆவை கேட்பதாக இருந்தாலோ அத்தகைய ஒருவரை நாம் ஏற்போம். நாம் தவறிலேயே இருந்தோம் என்பதாக ஆகி விட்டாலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மை அதன் மூலம் நிரூபணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு பங்கம் ஏற்படுகிற வகையில் ஆட்சேபனை செய்யாதீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பினான் என்று ஒருபுறம் நம்புகிறீர்கள். அவர்கள் முஜத்தித் ஆக மட்டும் இருந்தார்கள் என்பதாக இருந்தாலும் சரியே. அவர்கள் உண்மையாளராக இருந்தார்கள் என்று நம்புகிறீர்கள். அவர்களது துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது என்று

நம்புகிறீர்கள். அவர்கள் முன்னறிபிப்பு செய்தார்கள் என்று நம்புகிறீர்கள். முதல் விஷயம் எனது பேச்சைக் கேட்க வேண்டாம். ஆனால் என் முன் ஓர் இமாமைக் கொண்டு வாருங்கள். ஒரு தலைவரை என் முன்னால் கொண்டு வாருங்கள். பிறகு அவரது துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது என்று நிரூபித்துக் காட்டுங்கள். அவரது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதாக நிரூபணமாகி விட்டால் அவரை ஏற்பதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. சரிதான் நாங்கள் தவறில் இருக்கிறோம் என்று ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அடையாளம் நிறைவேறவில்லை என்று கூறுவீர்கள் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையை நீங்கள் ஆட்சேபனை செய்கிறீர்கள்.


ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களது நிலையாவது இவர்கள் வாசலையே அடைக்கிறார்கள். (அல் ஃபஸ்ல் 12 ஜுலை 1940, 12 வ.ஃபா 1319 ஹிஜ்ரி ஷம்ஸி தொகுதி 22, எண்.157, பக்கம் 6) எந்த விஷயத்தையும் கேட்கவும் விரும்பவில்லை. சிந்திக்கவும் விரும்பவில்லை.

சிறு சிறு சம்பவங்கள், உதாரணங்கள் ஆகியவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அவற்றில் ஒன்று ஒரு கூனல் விழுந்தவளின் உதாரணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூனல் விழுந்தவளின் உதாரணத்தைக் கூறி வந்தார்கள். அவளது முதுகில் கூனல் விழுந்திருந்தது. ஒருவர் அவளிடம், உனது முதுகு சரியாக வேண்டும் என்று விரும்புகிறாயா? அல்லது மற்றவர்களுக்கும் கூட கூனல் விழ வேண்டும் என்று விரும்புகிறாயா என்று கேட்டார். சிலரது இயல்பு பிடிவாதம் உடையதாக இருப்பது போன்று பொறாமை கொண்டிருப்பது போன்று அவளும் பதில் சொன்னாள். நான் கூனல் விழுந்தவளாக நீண்ட காலம் இருந்து விட்டேன். மக்கள் எனது கூனல் முதுகைப் பார்த்து சிரிக்கவும் கிண்டல் செய்பவர்களாகவும் இருந்தனர். எனது கூனல் இனி சரியாகாது. அவ்வாறே நான் கிழவியாகவும் ஆகி விட்டேன். இனி மக்களுக்கு கூனல் விழ வேண்டும். அதனைப் பார்த்து நான் சிரித்து கிண்டல் செய்ய வேண்டும். இனி அதில் தான் ரசனை ஏற்படும் என்று கூறினாள்.

இவ்வாறு சிலருக்குப் பொறாமை கொண்ட இயல்பு இருக்கிறது. நமது கஷ்டம் விலக வேண்டும் என்ற நோக்கம் இருப்பதில்லை. மாறாக, மற்றவர்கள் கஷ்டத்தால் பீடிக்கப்பட வேண்டும் என்று அத்தகையோர் விரும்புகின்றனர். (அல் ஃபஸ்ல் 2 ஆகஸ்டு 1961, தொகுதி 5/5, எண்.177, பக்கம் 5) அத்தகைய பொறாமை –களிலிருந்து விலகவும் துஆ செய்ய வேண்டும். இத்தகைய பொறாமைக்காரர்களில் நாம் ஒருபோதும் சேர்ந்து விடக் கூடாது. இத்தகைய பேச்சுக்களைப் பேசுபவர்களுள் ஒருவராக நாம் ஆகி விடக் கூடாது.

பிறகு ஒரு குருடரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு குருடர் இருந்தார். இரவு வேளையில் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். ஒரு மனிதருடைய தூக்கம் அதனால் கெட்டுப் போனது. அம்மனிதர் கூறினார். ஹாஃபிஸ்ஜி தூங்குங்கள். ஹாஃபிஸ் சாஹிப் கூறினார்: எங்கள் தூக்கம் எது? அமைதியாக இருப்பது தான் எங்கள் தூக்கம். அதன் பொருள் என்னவென்றால், தூக்கம் என்பது கண்ணை மூடிக் கொண்டு அமைதியாக இருப்பதற்குப் பெயராகும். எனது கண்ணோ முதலிலேயே மூடித்தான் இருக்கிறது. பிறகு அமைதியாக இருப்பதுதான். தேவைப்படும் என்றால் நான் அமைதியாகி விடுகிறேன் என்று அவர் கூறினார்.

நம்பிக்கையாளரின் நிலையாவது அவர் யாருக்கும் கஷ்டத்தைத் தரக் காரணமாக இருக்கமாட்டார். ஏனெனில் அவர் கூறுகிறார்: நான் முதலிலேயே அவ்வாறு கஷ்டம் தராமல் இருக்கும் வழக்கம் உள்ளவனாவேன். உலகம் அவரை அடிக்க விரும்பினால் அவர் கூறுவார். என்னை அடித்து விட்டு நீங்கள் பெறப்போவது என்ன? நான்தான் முதலிலேயே இறைவனுக்காக மரணித்து விட்டேன். அல்லாஹ் என்ன விரும்புவானோ அதனைச் செய்யத் தயாராகி விட்டேன். அவனுக்காக எனது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன். உலகம் மரணத்தைப் பார்த்துப் பயப்படுகிறது. ஆனால் ஒரு நம்பிக்கையாளரை உலகம் கொல்ல விரும்பும் போது அவர் பயப்படுவதில்லை. அவர் கூறுகிறார்: நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட அன்றே இறந்து விட்டேன். வித்தியாசம் இவ்வவளவு தான். நான் நடமாடுகிற இறந்தவனாக இருக்கிறேன். இப்போது என்னை நீங்கள் பூமிக்குக் கீழ் புதைக்கப் போகிறீர்கள். என்னைப் பொறுத்த வரையில் அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. (அல் ஃபஸ்ல் 23 மே 1943, தொகுதி 31, எண்.122, பக்கம் 6) இது உண்மையான நம்பிக்கையாளரின் சிந்தனையாக இருக்கிறது.




பிறகு இன்னோர் உதாரணத்தை அன்னார் தருகிறார்கள்: ''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். ஒரு பெண் திருமணத்தில் கலந்து கொண்டாள். அவள் மிகவும் கருமியாக இருந்தாள். ஆனால் அவளது சகோதரரின் மனைவி தாராளமான மனப்பான்மை கொண்டவராக இருந்தாள். நாத்தனாரும் அவனது சகோதரரின் மனைவியும் ஒரு திருமணத்தில் கலந்து கொண்டனர். தாராளமானவள் என்பதன் பொருள் அன்பளிப்பு தருவதில் சற்று தாராளமாக தருபவராக இருந்தாள். (கருமியான) அந்தப் பெண் அந்தத் திருமணத்தில் ஒரு ரூபாய் அன்பளிப்பு செய்தாள். அவர்கள் திரும்பும் போது கருமி பெண்ணிடம் ஒருவர் கேட்டார். அந்த திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தீர்கள். அதற்கு அப்பெண், நானும் எனது

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம் ...)*




*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

### உண்மையான ஏகத்துவம் எது?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள்:

இரண்டு விஷயங்களின் அடிப்படையில் ஈடேற்றம் அமைந்துள்ளது. ஒன்று, முழுமையான உறுதியுடன் இறையிருப்பின் மீதும் அவனது ஏகத்துவத்தின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இரண்டு, மனிதனுடைய மனதில், அந்த மகத்துவமிக்க இறைவன் மீது எந்த அளவு முழுமையான அன்பு பதிய வேண்டும் என்றால், அதன் ஆதிக்கத்தாலும் அந்த அன்பு மேலாங்குவதன் விளைவாகவும் இறைவனுக்குக் கட்டுப்படுதலே அவருடைய மன நிம்மதியாக அமைய வேண்டும். அது அல்லாமல் அவர் வாழ முடியாது என்ற நிலை உருவாகி விட வேண்டும். இறைவன் மீதான அன்பு எல்லா அந்நிய விஷயங்களின் மீதான அன்புகளையும் அழித்து இல்லாமல் செய்து விட வேண்டும். இதுவே உண்மையான ஏகத்துவமாகும். இது நமது தலைவர், எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்·.தபா (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் கிடைக்கவே முடியாது. (ஹகீகத்துல் வஹீ பக்கம்116)

### தூய்மையான மற்றும் முழுமைபெற்ற ஏகத்துவம்

எதுவரை உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல் -களை மனிதன் காண்பதில்லையோ, அதுவரை ஷைத்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேறுவதில்லை என்பதே உண்மையாகும். மேலும், உண்மையான ஏகத்துவம் அவனது உள்ளத்தில் நுழைவதுமில்லை. மேலும் அவனால் உறுதியான முறையில் இறையிருப்பை ஒப்புக் கொள்ளவும் முடியாது. மேலும் இந்தத் தூய மற்றும் முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைக்கிறது. (ஹகீகத்துல் வஹீ பக்கம் 115-118)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் உலகளவில் பிரசித்தி பெற்ற தமது த·.ப்ஸீரே கபீரில் இஸ்லாம் முன்வைக்கும் தூய ஏகத்துவத்தைப் பல்வேறு கோணங்களில் நன்றாக விவரித்துள்ளார்கள். சில ஞானமிக்க கருத்துகளை முன்வைக்கிறேன்.

திருக்குர்ஆன் தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: ஏகத்துவம் பற்றி இவ்வளவு விளக்கமாக வேறெந்த நூல்களிலும் இல்லை. (த·.ப்ஸீரே கபீர் தொகுதி10 பக்கம் 517)

பிறகு கூறுகின்றார்கள்: ஒரு நபி எந்த நாட்டில் பிறந்திருந்தாலும் சரி எல்லா நபிமார்களுக்கும் ஒன்றுபட்ட இலக்கு ஏகத்துவத்தைப் பரப்புவதாக இருந்தது. (த·.ப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 506)

ஏகத்துவம், மார்க்கத்தின் உயிர் என்பதே உண்மை -யாகும். ஒரு நபர் ஏகத்துவத்தை நன்றாகப் புரிந்து கொண்டால், பிறகு அவருக்கு மார்க்கத்தின் பெரும் பகுதிகள் புலப்பட்டு விடும். (த·.ப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 383)

இஸ்லாத்தைத் தவிர, முழுமையான ஏகத்துவத்தை முன்வைக்கும் எந்த மார்க்கமும் உலகில் இல்லை. (த·.ப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 395)




உலகில் எல்லா நபிமார் -களும் ஏகத்துவத்தை நிலை -நாட்டவே அனுப்பப்படுகிறார் -கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த விதத்தில் ஏகத்துவத்தை நிலைநாட்டினார்கள் என்றால், இறைவனுடைய ஏகத்துவம் குறித்து அன்னாரிடம் காணப் -பட்ட அந்த தன்மான உணர்வுக்கான முன்னுதாரணம் எந்த நபியிடமும் நமக்குத் தென்படுவதில்லை. (த·.ப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 340)

ஏகத்துவக் கொள்கை இந்த உலகின் வாழ்வாதாரத்தின் அடிப்படையாகும். (த·.ப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 518)

இது ஆழ்ந்து சிந்திக்கத்தக்க ஒரு ஞானமிக்க மேற்கோள் ஆகும்.

தூய ஏகத்தவம் தொடர்பாக, ஆழிய கருத்துகள், நுட்பங்கள் மற்றும் அறிவுப்பூர்வமான விஷயங்கள் கூறப்பட்டுள்ள, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஞானமிக்க வாக்கியங்களை, அவற்றின் விளக்கத்திற்குள் செல்லாமல், சுருக்கமாக, மாதிரிக்காக முன்வைக்கிறேன். இந்த வாக்கியங்கள் அனைத்தும் முழு கவனத்துடன் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியவை.

அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களின் மத்தியில் ஏகத்துவத்தினால் சகோதரத்துவம் உருவாகியது. முழுமையான ஏகத்துவம் நிலைபெறாமல் அமைதி நிலவ முடியாது. இறைவனுடைய ஏகத்துவம் என்ற மையக்கருத்தின் மூலமே எல்லா மார்க்கங்களின் ஒற்றுமை சாத்தியப்படும். (த∴ப்ஸீரே கபீர் தொகுதி7)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ஏகத்துவம் மார்க்கத்தின் உயிராகும். ஏகத்துவம் ரஹ்மான் எனும் பண்பின் பிறப்பிடமாகும். முழுமையான ஏகத்துவத்தின் பலன் முழுமையான இறை நம்பிக்கையாகும். முதலில் ஏகத்துவத்தைப் புரிய வேண்டும். அதன் பிறகு முழுமை பெற்ற துஆ உருவாகும். முழுமையான ஏகத்துவவாதி இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொள்ள வேண்டும். தூய்மையான ஏகத்துவத்தில் நிலை பெற்றுவிடக்கூடிய மனிதன் சொர்க்கத்தில் நுழைந்து விடுகிறான். ஏகத்துவத்தின் வரைபடம் இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் வைக்கப்பட்டுள்ளது. (த∴ப்ஸீரே கபீர் தொகுதி 10)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்நாளில் தென்படும் உண்மையான ஏகத்துவத்திற்கான முன்மாதிரிகள் உலக வரலாற்றில் ஈடு இணையற்றவை. இது தொடர்பாக அன்னார் கூறுகிறார்கள்:

எல்லா நபிமார்களுக்கும் ஒன்றுபட்ட இலக்கு ஏகத்துவத்தைப் பரப்புவதாக இருந்தது...... பெரும் பெரும் நபிமார்களின் வாழ்நாள்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அன்னார் எந்த விதத்தில் இணைவைத்தலை வேருடன் அழித்தார்களோ மேலும், ஏகத்துவத்தை பூமியில் பரப்புவதில் எந்த அளவு உயிரை மாய்த்துக் கொண்டும் தியாகங்கள் செய்தும் பணியாற்றினார்களோ அதற்கான முன்னுதாரணம் உலகின் எந்த நபியின் வாழ்விலும் தென்பட முடியாது. (த∴ப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 506)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களுடைய மேற்கோள்கள்:


ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தம்முடைய எண்ணற்ற சொற்பொழிவுகள் மற்றும் ஜுமுஆ பேருரைகளில் தூய ஏகத்துவம் எனும் தலைப்பை மிகவும் விவரித்துக் கூறியுள்ளார்கள். அதற்கான ஒரு மாதிரியை முன் வைக்கிறேன். ஹுஸூர் அவர்கள் தமது ஒரு ஜுமுஆ குத்பாவில் கூறுகிறார்கள்:



அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களைத் தனது தூய ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக உலகிற்கு அனுப்பினான். அல்லாஹ் அன்னாருடைய குழந்தை பருவத்திலிருந்தே தன் புறமிருந்து எத்தகைய ஏற்பாட்டைச் செய்து விட்டான் என்றால், அன்னாருடைய உள்ளத்தைத் தூய்மையானதாகவும் சுத்தமானதாகவும் தெளிவானதாகவும் ஆக்கி விட்டான். அல்லாஹ் அன்னாரது குழந்தை பருவத்திலிருந்தே தன் மீதான அன்பையும் ஷிர்க்கின் மீதான வெறுப்பையும் அன்னாரிடம் விதைத்து விட்டான்.

பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: ஏக இறைவனின் மீதிருந்த அன்பின் உத்வேகம், அன்னாருடைய இரவின் உறக்கத்தையும் பகலின் ஓய்வையும் நிம்மதியையும் பறித்து விட்டது. அன்னாருக்கு ஏதாவது துடிப்பு இருந்ததென்றால், அது எவ்வாறாவது உலகம் ஏக இறைவனை வழிபடுவதில் லயித்து விட வேண்டும். உலகம் அதனைப் படைத்த இறைவனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பு மட்டும் தான் இருந்தது. இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக அன்னாருக்கு வேதனைகளையும் பொறுத்துக் கொள்ள நேர்ந்தது. கொடுமைகளையும் சகித்துக் கொள்ள வேண்டி வந்தது. ஆனால், இந்தக் கொடுமைகளால், இந்த வேதனைகளால், ஓரிறைவனை வழிபடுவதை விட்டும், ஏக இறைவனின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதை விட்டும் அன்னாரைத் தடுக்க இயலவில்லை.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:



பிறகு, அன்னாருடைய இளமை பருவத்தைப் பாருங்கள்! எவ்வாறு ஒரு குகையில் சென்று ஓரிறைவனை வணங்கி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் பல நாள்களைக் கழிப்பார்கள். தனிமையில் தம்முடைய இறைவனுடன் ஓர் அன்பு செலுத்துபவர் தம் அன்பருடன் பேசும் விஷயங்களைப் பேசுவார்கள். அவனை வணங்கி வருவார்கள். இதைக் கண்ட அன்னாருடைய சமுதாயமும் கூட, முஹம்மது (ஸல்) தம் இறைவன் மீது பேரன்பு செலுத்தக்கூடியவர் ஆகி விட்டார் எனக் கூறினார்கள்.

பிறகு நபித்துவ காலம் தொடங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர், கா∴பிர்கள் மீதிருந்த பயத்தினால் அன்னாரை இறைவனுடைய தூதுச்செய்தியைப் பரப்புவதிலிருந்து தடுக்க முயற்சி செய்தார். அதற்கு இந்த உண்மை பேரன்பர் என்ன அழகிய பதிலளித்தார்கள்! 'என்னுடைய தந்தையின் சகோதரரே! இந்த மக்கள் எனது வலது கையில் சூரியனையும் இடது கையில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்து விட்டாலும் சரி! இறைவன் இந்தப் பணியை முழுமை அடையச் செய்யாத வரை அல்லது நானே இந்தப் பணியில் மரணித்து விடாத வரை என்னால் இந்தப் பணியைக் கை விட முடியாது' என்றார்கள். (அஸ் ஸீரத்துன் நபவிய்யா லி இப்னு ஹிஷ்ஷாம், முபாதாத்தே ரஸூல் (ஸல்) கவ்மிஹீ வமா கான மின்ஹும்)

இறைவன் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த பேரன்பு இறைவனுடைய ஏகத்துவத்தை உலகில் நிலைபெறச் செய்வதற்காக அன்னாருக்கு இருந்த துடிப்பு அதற்காக அன்னார் மேற்கொண்ட முயற்சிகள் ஆகியவற்றில் எவரும் அன்னாரோடு போட்டியிட முடியாது. (ஜுமுஆ குத்பா 4 பிப்ரவரி 2005)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பற்றி, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் சொற்களில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பிலால் இப்னு ரிபாஹ், உமய்யா பின் கல்ஃப் உடைய ஓர் அபிஸீனிய அடிமையாக இருந்தார்கள். உமய்யா, பிலால் (ரலி) அவர்களை நெருப்பு போன்று வெயில் சுட்டெரிக்கும் மதிய வேளையில், மக்காவின் பாறைகள் நிறைந்த மைதானம், அடுப்பைப் போன்று கொதித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், வெளியே அழைத்துச் சென்று, நிர்வாணமாக்கித் தரையில் படுக்க வைத்து, பெரிய பெரிய சூடான பாறைகளை அவர்களின் மார்பு மீது வைத்து விட்டு, (பிலால்!) 'லாத் மற்றும் உஸ்ஸா சிலைகளை வணங்கு! முஹம்மதை (ஸல்) விட்டு விலகி விடு! இல்லையென்றால் இப்படியே தண்டனை கொடுத்து உன்னைக் கொன்று விடுவேன்' என்று கூறினான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு அரபி அதிகம் தெரியாது. எனவே, அவர்கள் 'அஹத் அஹத்' அதாவது 'அல்லாஹ் ஒருவனே' என்று மட்டும் கூறினார்கள்.

இந்தப் பதிலைக் கேட்டு உமய்யா மேற்கொண்டு ஆத்திரமடைந்து விடுவான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் கழுத்தில் கயிற்றைக் கட்டி அவர்களைத் தீய சிறுவர்களிடம் ஒப்படைத்து விடுவான். அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை மக்காவின் பாறைகள் நிறைந்த தெருக்களில் இழுத்துக் கொண்டே சுற்றித் திரிவார்கள். அதனால் அவர்களுடைய உடல் இரத்தத்தால் நனைந்து விடும். அவ்வாறிருந்தும் கூட, அவர்களின் நாவிலிருந்து அஹத் அஹத் என்ற சொற்களைத் தவிர வேறு எந்தச் சொல்லும் வராது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீது இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைகளைக் கண்ட போது, மிகப்பெரிய தொகையைக் கொடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை விலைக்கு வாங்கி விடுவித்து விட்டார்கள். (சீரத் காத்தம்முன் நபிய்யீன் பக்கம் 140)

இவ்வாறு ஏகத்துவத்தின் மீது பேரன்பு கொண்டிருந்த இந்த நபர் மிக மகிழ்ச்சியோடு, இறைவனின் ஏகத்துவத்தைப் பறைசாற்றும் மாமனிதருடைய அடிமையாக மாறி, சய்யிதுனா பிலால் (ரலி) ஆக அதாவது, எங்கள் தலைவர் பிலாலாக மாறி விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய வாழ்வில் தூய ஏகத்துவத்தின், ஈமானுக்கு வலுவூட்ட கூடிய காட்சிகள்.

அவையோரே! நமது அன்பிற்குரிய எஜமானர்! ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் தூய்மையான வாழ்க்கை ஒரு திறந்த புத்தகத்தைப் போன்றது. அதில் நமக்கு இறைதொடர்பு மற்றும் ஏகத்துவம் தொடர்பாக எழுச்சியூட்டுகின்ற காட்சிகள் ஜொலித்துக் கொண்டிப்பது தென்படுகிறது. அன்னாருடைய அருளுக்குரிய வாழ்நாளில் தூய ஏகத்துவத்தின் மீதிருந்த பேரன்பு தொடர்பாகவும் எப்படிப்பட்ட முன்மாதிரிகள் தென்படுகின்றனவென்றால், அவை நம் உள்ளங்களின் மூலைமுடுக்குகளையெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான பேரன்பில் திளைக்க வைத்து விடுகிறது.

கண்ணியத்திற்குரிய மக்கா மற்றும் ஒளிபொருந்திய மதீனாவின் வீதிகளுக்குச் சென்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடித்தடங்களால் நமது உள்ளங்களையும் கண்களையும் ஒளிரச் செய்வதற்கான நற்பேறு பெறுவோம்!



இறைதூதர் (ஸல்) அவர்களின் முதுகில் ஒரு சதைத் துண்டு வீக்கம் அடைந்து வெளிப்பட்டிருந்தது. அபூ ரம்ஷா உடைய தந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'தங்கள் முதுகில் இருக்கும் வீக்கத்தை என்னிடம் காட்டுங்கள். நான் ஒரு மருத்துவன்; சிகிச்சை செய்து அதை சரிசெய்து விடுவேன்' என்று கூறினார். இந்த விஷயத்தைக் கேட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தின் மீதிருந்த அளவற்ற தன்மான உணர்வினால், 'உண்மையான மருத்துவனோ இறைவனே ஆவான். இந்த வீக்கத்தை உருவாக்கியவன் அவனே! இதற்கு சிகிச்சையளிப்பவனும் அவனே ஆவான்' என்று கூறினார்கள். (அபூதாவூது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எல்லா விஷயங்களும் இறைவனுடைய ஏகத்துவத்தைத் துதிபாடுவதிலும் அவனுடைய மகத்துவத்தை எடுத்துரைப்பதிலும் முடிவடைந்து வந்தது. ஒருமுறை அன்னாருடைய விரைவாக செல்லக்கூடிய ஒட்டகம், ஒரு காட்டரபியின் ஒட்டகத்தைத் விட பின்தங்கி விட்டது. அந்த சமயத்தில் அன்னார் எவ்வளவு அருமையான ஒரு விஷயத்தை நவின்றார்கள்! 'அல்லாஹ்வே எந்த ஒன்றையும் சிலவேளை மேலோங்கவும் சிலவேளை கீழிறங்கவும் செய்கின்றான். இறைவனே எல்லாரையும் விட மேலானவன்' என்று கூறினார்கள். (அபூ தாவூது)

சுப்ஹானல்லாஹ்! தூய ஏகத்துவத்தை எவ்வளவு அழகான முறையில் எடுத்துரைத்துள்ளார்கள்!



இறைவனுடைய ஏகத்துவத்தின் மீது, ஏற்றுக் கொள்ளப்பட்ட திருத்தூதர் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த தன்மானத்தின் உச்சம், உஹுத் போரின்போது நிகழ்ந்த இந்த சம்பவத்தில் தென்படுகிறது:

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தற்காலிக தோல்வியின் போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹுத் மலையடிவாரத்தில் ஒரு குறுகிய இடத்தில் தஞ்சம் அடைந்தார்கள். அப்பொழுது அந்த மலையடிவாரத்தில் முஸ்லிம்களின் எஞ்சியிருந்த படை நின்று கொண்டிருந்தது. அபூ ஸுஃப்யான் மிகவும் உரத்த குரலில், 'நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொன்று விட்டோம்' என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருடைய இந்தத் தற்புகழ்ச்சியுடன் கூடிய ஆணவத்துக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. மேலும் இதுதான் அந்த சூழலுக்குப் பொருத்தமானதாக இருந்தது.

இதனால், அபூஸுஃப்யான், 'நாங்கள் அபூபக்ரையும் (ரலி) கொன்று விட்டோம்' என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த பதிலும் அளிக்க வேண்டாம்' என்று கூறினார்கள். பிறகு, அபூ ஸுஃப்யான், 'நாங்கள் உமரையும் (ரலி) கொன்று விட்டோம்' என்று கூறினார். இதற்கும் மௌனமாக இருக்குமாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அப்பொழுது காஃபிர்களுக்கு தாம் போர்க்களத்தை வென்று விட்டதாக நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

இதனால், அபூஸுஃப்யானும் அவருடைய கூட்டாளி -களும் மகிழ்ச்சி வெள்ளத்தில், 'யா உஃலூஹுபுல்! யா உஃலூஹுபுல்' அதாவது, இன்று இஸ்லாத்தைத் தீர்த்துக் கட்டிய நமது ஹுபுல் சிலையின் மேன்மை உயரட்டும்!' என்று முழக்கமிட்டார்கள். அப்பொழுது தாம் மரணித்து விட்டதாக கூறப்பட்ட போதும், அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணித்து விட்டதாக கூறப்பட்ட போதும், உமர் (ரலி) அவர்கள் மரணித்து விட்டதாக கூறப்பட்ட போதும், தம்முடைய தோழர்களுக்கு மௌனமாக இருக்கும்படி அறிவுரை கூறி வந்த, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்பொது இறைவனுடைய ஏகத்துவத்தின் கண்ணியம் பற்றிய கேள்வி எழும்பியபோது, ஷிர்க்கின் முழக்கம் போர்க்களத்தில் உயர்த்தப்படும்போது தூய ஏகத்துவத்தின் மீதான தன்மான உணர்வினால் அன்னாருடைய ஆன்மா அமைதியிழந்தது.

மேலும், அன்னார் தம்முடைய சஹாபாவைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இந்த ஆணவத்திற்கு பதிலளிப்பதில்லை?' என்று கேட்டார்கள். சஹாபா, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! 'நாங்கள் என்ன சொல்லட்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், "நீங்கள், 'அல்லாஹு அஃலா வ அஜல் அல்லாஹு அஃலா வ அஜல்' அதாவது, ஹுபுல் சிலையின் மேன்மை உயர்ந்து விட்டதாக நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள்! கேளுங்கள்! இணையற்ற அந்த ஏக இறைவனே கண்ணியத்திற்குரியவன். அவனது மகிமையே உயர்ந்தது; மேலானது என்று பதில் கூறுங்கள்" எனக் கூறினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய இன்னுயிரை ஆபத்தில் ஆழ்த்திய வண்ணம், தூய ஏகத்துவத்தின் முழக்கத்தை உயரச் செய்தார்கள். இந்தத் துணிச்சலான, வீரமான பதில் எந்த அளவுக்கு எதிரியின் படையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்களால் மீண்டும் தாக்குதல் தொடுப்பதற்குத் துணிவு கொள்ள முடியவில்லை.

தூய ஏகத்துவத்திற்காக வெளிப்படுத்தப்பட்ட இந்தத் தன்மான உணர்வின் முன்மாதிரி, உலக வரலாற்றில் எப்பொழுதும் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையில், ஏகத்துவத்தின் மீதான இதே பேரன்பு மற்றும் இதற்காக வெளிப்படுத்தப்பட்ட தன்மான உணர்வின் மகத்தான முன்மாதிரி இந்த சம்பவத்தில் இருந்து கிடைக்கின்றது:

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது. சாத்தியமான மற்றும் இருந்த எல்லா சிகிச்சையும் செய்யப்பட்டது. ஆனால், நிவாரணம் கிடைக்கவில்லை. ஒரு பிரபலமான மருத்துவர் வரவழைக்கப்பட்டார். அவர் வந்து அன்னாரை பரிசோதித்த பிறகு, 'கவலை கொள்ள வேண்டாம் இரண்டு நாட்களில் குணப்படுத்தி விடுவேன்' என்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஷிர்க்கான விஷயத்தைக் கேட்டதும் இவ்வாறு கூறினார்கள்:



நான் இந்த மருத்துவரிடம் ஒருபோதும் சிகிச்சை பெற விரும்பவில்லை. அவர் தன்னை இறைவன் என்று கருதுகின்றாரா? சிகிச்சைக்காக அவரிடம் பேசப்பட்ட பணத்தை விட அதிகமாக கொடுத்து, அவரை திருப்பி அனுப்பி விடுங்கள். உண்மையிலேயே சிகிச்சை அளிக்கக் கூடியவன் நம்முடைய இறைவனே ஆவான்!

இஸ்லாத்தின் மூலம் உலகில் தூய ஏகத்துவம் நிலைபெற்றது. நேர்வழி வழங்கப்பட்ட கிலாஃபத்திற்குப் பிறகு, வழிகேடு மற்றும் சீரகேட்டின் ஒரு நீண்ட காலம் வந்தது. பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் மூலம், மீண்டும் புதிதாக தூய ஏகத்துவம் நிலைபெற்றது. அது அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நிழலின் கீழ் அனுதினமும் விரிவிடைந்து கொண்டே செல்கிறது. இதைப் பற்றிய குறிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகளிலும் கிடைக்கப் பெறுகிறது. சில கவிதை வரிகளை செவிமடுங்கள்:

சிறப்பான தவ்ஹீதின் தூய தாக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதை வரிகளில் கூறுகிறார்கள்:

முக்கடவுள் கொள்கையை இப்போது அறிவுடையவர்கள் கைவிட்டு விட்டனர்.

ஏகத்துவத்தின் நீருற்றின் மீது தமது உயிரை அர்ப்பணிப்பவர்களாக அவர்கள் மீண்டும் ஆகிவிட்டனர்.

எல்லாப் பக்கமும், எல்லா நாட்டிலும் சிலை வணக்கத்தின் வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

மனிதனை வணங்குபவர்களுக்கு எவ்வித மதிப்பும், பெருமையும் இல்லாமல் போய் விட்டது.

விண்ணிலிருந்து படைத்தோனின் ஏகத்துவத்தின் காற்று வீசத் தொடங்கியிருக்கிறது.

நாவுகள் ஆயிரக்கணக்கான வீணான விஷயங்களைக் கூறினாலும் உள்ளங்கள் எங்களோடு தான் இருக்கின்றன.

தூய ஏகத்துவத்தின் நீரூற்றை அவனே எனக்கு வழங்கி இருக்கின்றான். அதன் மூலமாக மார்க்கத்தின் தோட்டத்தின் மறுமலர்ச்சிக்கான மலர்களை நாம் நட இருக்கின்றோம்.

இஸ்லாம் முன்வைக்கும் தூய ஏகத்துவத்தைப் பற்றி சில விஷயங்களை முன்வைத்த பிறகு, உரையின் இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஒரு மேற்கோளை முன்வைக்க விரும்புகிறேன். அதை நாம் அனைவரும் மிகவும் உண்ணிப்பாகக் கேட்பதும் கவனமாக மனதிற் கொள்வதும் மிக அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸிஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறினான்:

خذوا التوحيد التوحيد يا ابناء الفارس

அதாவது, பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவர்களே! ஏகத்துவத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். (பராஹீனே அஹ்மதிய்யா - ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 267)

பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அன்னாருடைய குடும்பத்தை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, முழு ஜமாஅத்தும் ஆன்மிக ரீதியாக, பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வட்டத்திற்குள் வருகிறது. மேலும், இந்தக் கட்டளை முழு ஜமாஅத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

துன்பத்தின் போது மனிதன் ஒரு குறிப்பான பொருளைப் பற்றிப் பிடித்துக் கொள்கின்றான் என்பது பொதுவிதி. நீங்கள் துன்பத்தின் போது ஏகத்துவத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்! இதனுள் ஏனைய அனைத்து விஷயங்களும் உள்ளன என்று கூறுகின்றான். எனவே, எப்பொழுதும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற குறிக்கோளைத் தம் முன் நிறுத்த வேண்டியது நமது ஜமாஅத்தின் கடமை. (ஜுமுஆ பேருரை ஆகஸ்ட 28, 1936 - குத்பாத்தே மஹ்மூதின் தொகுதி 17, பக்கம் 570-571)

தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த ஒரு துஆ:

இறுதியில் நாம் துஆ செய்கின்றோம். வல்லமை உள்ள இறைவா! தனது அடியார்களுக்கு வழிகாட்டுபவனே! எவ்வாறு புதிய கண்டுபிடிப்புகள் தோன்றுகின்ற காலமாக, இக்காலத்தை நீ ஆக்குகின்றாயோ அவ்வாறே, திருக்குர்ஆனின் உண்மைகளையும், அதன் ஞானத்தையும் கவனமற்று இருக்கின்ற இந்த சமுதாயத்தின் மீது வெளிப்படுத்துவாயாக! இப்போது இந்த காலத்தை உன் பக்கமும், உனது வேதத்தின் பக்கமும், உனது ஏகத்துவத்தின் பக்கமும் ஈர்த்துக் கொள்வாயாக! நிராகரிப்பும் இணைவைத்தலும் மிகவும் அதிகமாகி விட்டன. இஸ்லாம் அதாவது, சாந்தி, சமாதானம் குறைந்து விட்டது.

கருணை காட்டுபவனே! இப்போது கிழக்கிலும், மேற்கிலும் ஏகத்துவத்தின் காற்றை வீசும்படி செய்வாயாக. வானத்தில் ஈர்ப்பின் ஓர் அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டுவாயாக. கருணை காட்டுபவனே! உனது கருணையின் அதிகமான தேவையுடையவர்களாக நாங்கள் இருக்கின்றோம். வழிகாட்டுபவனே! உனது வழிகாட்டுதலின் அதிகமான தேவை எங்களுக்கு இருக்கின்றது. உனது ஒளிகள் வெளிப்படுகின்ற அந்த நாள் அருளுக்குரியது. உனது வெற்றியின் முரசு கொட்டப்படுகின்ற அந்த நேரம் எவ்வளவு அருளுக்குரியது. நாங்கள் உன் மீதே நம்பிக்கை வைத்துள்ளோம். உனது உதவி இல்லாமல் அச்சத்தில் இருந்து விலகவும் முடியாது, ஆற்றலைப் பெறவும் முடியாது. நீயே மேன்மை மிக்கவனும், மகத்துவம் உள்ளவனும் ஆவாய். (ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 614)

அல்லாஹ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு திருக்குர்ஆனின் எப்படிப்பட்ட கருத்துகளை கற்பித்தான் என்றால் அதன் மூலமாக அன்னார் நாத்திகர்களின் அனைத்து கேள்விகளுக்கும் ஆதாரப் பூர்வமாகப் பதிலளித்தார்கள். மேலும் எல்லா விதமான சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதற்காக முயற்சி செய்தார்கள். மேலும் அன்னாரின் புத்தகங்களை ஆய்வு செய்வதன் மூலமாக எண்ணற்ற நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் நாத்திகம் மற்றும் மார்க்கமின்மை என்கின்ற புதைகுழியில் இருந்து வெளியேறி உண்மையான இறைவனை அறிந்து கொண்டார்கள்.

நில அளவையராகிய ஹஸ்ரத் மியான் முஹம்மது தீன் (ரலி) அவர்கள் தங்களது சம்பவத்தை இவ்வாறு எழுதுகிறார்கள்:



“ஆரியர், பிரம்மர் மற்றும் நாத்திகர் -களின் சொற்பொழிவுகளின் தீய தாக்கம் என்னையும் என்னைப் போன்ற ஏராளமானவர் -களையும் அழிவிற்குள்ளாக்கி விட்டது. அந்தத் தாக்கங்களை உட்கொண்டவாறே நான் அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் பராஹீனே அஹ்மதிய்யா புத்தகத்தைப் படித்தவாறே இறை இருப்பிற்கான சான்றுகள் இருக்கின்ற பக்கம் 90 அடிக்குறிப்பு 1 மற்றும் 149 அடிக்குறிப்பு 11 ஆகிய பக்கங்களை அடைந்தவுடன் என்னுடைய நாத்திகக் கொள்கை திடீரென வெளியேறி விட்டது. மேலும் உறங்கிக் கொண்டிருப்பவர் அல்லது மரணித்தவர் உயிர் பெற்று விட்டால் அவருடைய கண் எவ்வாறு திறந்து விடுமோ அதேபோன்று என்னுடைய கண்ணும் திறந்து விட்டது. (அல் ஹகம் 14 அக்டோபர் 1938)

**மவ்லவி முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப்**
**நாஸிர் தஃவத்தே இலல்லாஹ், காதியான்**

**தமிழாக்கம்: இப்னு வஸீம்**




*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

### ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பார்வையில் இஸ்லாமிய ஷரீஅத் ரீதியான பர்தா

இஸ்லாமிய பர்தாவுக்கான வடிவம் என்ன?

ஒவ்வொருவரும் தனது சிந்தனைப்படி இதைப் பற்றி விவாதிக்கிறார். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நெறி நீதி தீர்ப்பவர் என்று கூறியுள்ளான். திருக்குர்ஆனின் மற்றும் இஸ்லாத்தின் எந்தவொரு போதனை பற்றியும் அன்னார் வழங்கிய விளக்கவுரையும் தெளிவுரையும் இறுதியானதும் உறுதியானதும் ஆகும். ஆக, ஷரீஅத்தின் பர்தாவைக் குறித்து அன்னார் (அலை) இவ்வாறு கூறுகிறார்கள்:

“ஷரீஅத்தின் பர்தா எதுவென்றால், மேலாடையை வட்டமாகக் கொண்டு தனது தலைமுடியை நெற்றியின் மற்றும் கன்னத்தின் சிறுதி பகுதியுடன் சேர்த்து முற்றிலும் மறைத்துக் கொள்ள வேண்டும். அழகான பகுதி ஒவ்வொன்றையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, முகத்தின் அக்கம் பக்கம் மேலாடை எப்படி இருக்க வேண்டும் என்றால், கண்களும் மூக்கின் சிறு பகுதியும் மட்டும் திறந்திருக்கலாம். மற்ற இடத்தில் மேலாடை இருக்க வேண்டும். இது போன்ற பர்தா அணிவதை இங்கிலாந்து பெண்களால் சுலபமாக மேற்கொள்ள முடியும். மேலும், இவ்வாறு நடை பயிற்சி மேற்கொள்வதில் தவறு ஒன்றும் அல்ல. கண்கள் திறந்திருக்கும்.” (ரிவ்யூ ஆ்.்ப் ரிலீஜியன்ஸ் தொகுதி 4, பக்கம் 17, ஜனவரி 1905 இன் இதழ், ஆதாரம்: த.்.ப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை), தொகுதி 3 பக்கம் 446, ஆதாரம்: குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 2 பக்கம் 101)

‘இஸ்லாமிய பர்தா’ குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மற்றுமொரு வழிகாட்டலைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலீ கான் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

“ஒருமுறை நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பர்தாவைப் பற்றி கேட்டேன். அப்போது நான் ஒரு பணிக்காக ஹஸ்ரத் (அலை) அவர்களிடம் சென்றிருந்தேன். அப்போது நானும் ஹஸ்ரத் (அலை) அவர்களும் மட்டுமே இருந்தோம். இது ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா ஷரீ.்.ப் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் வசித்து வந்த அந்த வீட்டின் முற்றம் ஆக இருந்தது. ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களுக்குத் தெற்கு பக்கம் பெரிய அறையின் மாடியில் இருந்தது.

ஹஸ்ரத் (அலை) அப்போது அங்கே அமர்ந்திருந் -தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் தலைப்பாகையின் கூடுதல் துணியைக் கொண்டு, மூக்கின் கீழ் பகுதியையும் வாயையும் மறைத்து, இப்படி இருக்க வேண்டும் என்று எனக்குக் காண்பித்தார்கள். அதாவது, கண்கள் திறந்திருக்கலாம்; மற்ற அனைத்தும் மறைந்திருக்க வேண்டும் என்பது போல இருந்தது.” (அல் பஸ்ல் பத்திரிகை, 14, பிப்ரவரி 1938, அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 2, பக்கம் 222, சீரத் ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலீ கான் சாஹிப் ரலி)

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கூறப்பட்ட விளக்கத்துக்குப் பிறகு, இஸ்லாமிய பர்தாவின் வடிவத்தைப் பற்றிய எந்த சந்தேகமும் எஞ்சியிருக்காது.

### ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பார்வையில் பெண்களின் வேலைகளின் தன்மையின் அடிப்படையில் பர்தாவில் மென்மை

ஒருவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பிப்ரவரி 23, 1928 அன்று கடிதம் மூலமாக பர்தாவைப் பற்றி வினவினார். அதற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு விளக்கமான கடிதத்தை எழுதினார்கள். அதில் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் ஒளியில் சரியான இஸ்லாமிய பர்தாவைப் பற்றி விளக்கியவாறு இந்த மிதவாதக் கொள்கையை முன் வைத்தார்கள்:

திருக்குர்ஆன் பர்தாவுக்கென ஓர் அடிப்படையைக் கூறியிருக்கிறது. மேலும் அது, பெண்ணுக்குப் பர்தா அணிவது அவசியம் என்பதாகும். إِلَّا مَا ظَهَرَ مِنْهَا (அதாவது, தானாகவே வெளிப்படுவதைத் தவிர) தானாகவே வெளிப்படக் கூடிய பெரிய விஷயங்கள் இரண்டாகும். அதாவது, உயரம் மற்றும் உடல்(வாகு). ஆனால், பெண்ணுடைய பணிகளின் அடிப்படையில் அல்லது நேரத்தின் அடிப்படையில், தானாகவே வெளிப்படுவது பர்தாவில் சேராது.

ஆக, இந்தக் கட்டளையின்கீழ் மருத்துவர் பெண்களின் நாடி பிடித்துப் பார்க்கிறார். இந்த விஷயத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை நோய் நிர்பந்திக்கிறது. முகத்தில்

ஏதாவது தோல் வியாதி இருந்தால், மருத்துவர் முகத்தையும் பார்ப்பார். உட்புற வியாதி என்றால், நாக்கையும் பார்ப்பார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒரு போரில் நாங்கள் தண்ணீர் எடுத்து வந்து கொண்டிருந்தோம். அப்போது எங்களது கெண்டைக்காலில் துணி விலகி விடும்.'

அந்த நேரத்தில் கெண்டைக்காலில் துணி விலகி விடுவது திருக்குர்ஆனுக்கு முரணானதாக இருக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆனின் இந்தக் கட்டளைக்கு ஏற்பவே இருந்தது. போர் தேவைகளின் அடிப்படையில் பெண்கள் பணிபுரிவது அவசியமாக இருந்தது.....

இந்த அடிப்படையின் கீழே, வெளியே வயல் வெளிகளில் பெண்களுக்கு வேலை செய்ய வேண்டி வரும் வகையில், ஏதாவது ஒரு குடும்பத் தொழில் இருக்கிறது என்றால், அவர்களுக்குக் கண்களும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் திறந்திருப்பது மிகவும் அவசியம்.

எனவே, اِلَّا مَا ظَهَرَ مِنۡهَا என்பதன் கீழ், நெற்றியில் இருந்து வாய் வரையிலான பகுதியைத் திறப்பது அவர்களுக்கு முற்றிலும் ஆகுமானது. பர்தாவுக்கான கட்டளைப்படி அதைத் திறக்காமல் அவர்களால் வேலை பார்க்க முடியாது.

ஒரு சிரமம், ஆகுமானதாக இருக்கும் நிபந்தனையின் அடிப்படையில், வாழ்வின் அவசியமான விஷயங்களுக்காக, சிரமங்களின் அவசியங்களுக்காக, எதைத் திறக்க வேண்டி வருகிறதோ அதைத் திறப்பது பர்தாவுக்கான கட்டளை -யிலேயே அடங்கும். ஆனால், எந்தப் பெண்ணின் வேலை, அவரைத் திறந்தவெளியில் சென்று வேலை பார்க்குமாறு நிர்பந்திக்கவில்லையோ அவரது முகம் அந்தப் பர்தாவில் அடங்கும். (நூல்: اَلۡاَزۡهَارُ لِذَوَاتِ الۡخِمَارِ 'துப்பட்டா அணிந்திருக்கும் பெண்களுக்கு மலர்கள்' பக்கம் 201)

### பெண்களுடைய பணிகளின் அடிப்படையில் ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் அறிவுரைகள்

ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மருத்துவ களத்தில் மனித குலத்துக்குத் தொண்டாற்றக்கூடிய பெண்களுக்கு அறிவுரை வழங்கிய வண்ணம் இவ்வாறு கூறினார்கள்:

"பெண் மருத்துவர்கள் இருக்கிறார்கள். நோயாளிகளை கவனித்துக் கொள்ளும் பெண்கள் இருக்கிறார்கள். இஸ்லாத்தின் போதனைப்படி அவர்களுக்கான பர்தாவின் தரம் மாறுபட்டதும் மென்மையானதும் ஆகும். எனினும், அவர்கள் அந்தப் பணிகளை முடித்துக் கொண்டு தமது வீடுகளின் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் போது, அவர்கள் மற்றவர்களை விட அதிகம் கடுமையாகப் பர்தாவை மேற்கொள்வது அவர்களின் கடமையாகும்.

நீங்கள் பார்த்திருப்பீர்கள்! வேலை பார்ப்பதற்கான ஆடை வேறாக இருக்கும். மனிதன் வீட்டுக்கு வந்து அன்றாட வாழ்வை மேற்கொள்ளும் போது, அவன் வேலை பார்ப்பதற்கான ஆடையை அவிழ்த்து விட்டு, மற்ற உடைகளை அணிந்து கொள்வான். எனவே, இதே வழிமுறைதான் இஸ்லாத்திலும் தொடர வேண்டும்.

வேலையின் எதிர்பார்ப்பு மற்றும்வேலைக்கான ஆடை, நீங்கள் மற்ற நேரத்தை விட மென்மையான பர்தா அணிய வேண்டும் என உங்களை நிர்பந்தித்தால், இஸ்லாம் அதற்கு அனுமதியளிக்கிறது. நிபந்தனை என்னவென்றால், நீங்கள் வெட்கம் எனும் மேலாடையை அணிந்திருக்க வேண்டும். ஆனால், அதற்குப் பிறகு, அன்றாட வாழ்வில் இதே வழிமுறைப் பின்பற்றுவது பொருத்தமானதல்ல.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற இடங்களில் பார்த்திருக்கிறேன்! தொழிலாளிகள் முற்றிலும் வேறு ஆடை அணிந்து கொண்டு வேலைக்கு செல்வார்கள். திரும்பி வரும் போது, தூய்மையான Coat, Pant அணிந்து Tie போட்டுக் கொண்டு வெளியே வருவார்கள். இவர்கள் அதே மக்கள்தானா என அடையாளம் தெரியாமல் இருப்பார்கள். எனவே, நீங்கள் உங்களது சமூகத்தில் இதே போன்று, சூழ்நிலைக்குப் பொருத்தமான மாற்றங்களை செய்து கொள்ளுங்கள். பிறகு, எவரும் உங்கள் மீது ஆட்சேபனை செய்ய முடியாது. (குத்பாத்தே தாஹிர் தொகுதி 1 பக்கம் 364,365)

பர்தா முஸ்லிம் பெண்ணின் முன்னேற்றத்தில் தடையாக இருக்கிறது என்ற ஓர் ஆட்சேபனையும் இஸ்லாமிய பர்தாவின் மீது செய்யப்படுகிறது. இத்தகைய ஆட்சேபனை செய்பவர்களிடம் கேள்வி என்னவென்றால், உலகில் கோடிக் -கணக்கான பெண்கள் எத்தகையவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள் குடிசைகளில், பின்தங்கிய குடியிருப்புகளில் மற்றும் காடுகளில் வசிக்கின்றார்கள். ஹிஜாப் அணிவது, பர்தா அணிவது ஒருபுறமிருக்கட்டும்! அவர்களின் உடல்களை மறைப்பதற்குக்கூட அவர்களுக்கு மேல் முழு ஆடை இருப்பதில்லை. அவர்கள் உலகில் ஏதேனும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து விட்டார்களா?



இந்த ஆட்சேபனையை சுருக்கமாக ஆய்வு செய்தால், இந்த உண்மைத்துவம் முன்வருகிறது. அதாவது, 'இஸ்லாமிய பர்தா' குறித்து திருக்குர்ஆனில் இறங்கி வந்த வசனங்களில், உம்மஹாத்துல் மு.ஃமினீன், (ரலியல்லாஹு அன்ஹுன்ன) அதாவது, நம்பிக்கை கொண்டவர்களின் தாய்மார்களிடம் தான் முதலில் உரையாடப்பட்டுள்ளது.

அவர்கள் பர்தாவைப் பேணியவாறு பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காக சென்று வந்தார்கள். அருளுக்குரிய ரமலான் மாதத்தில் இ.ஃதிகா.ஃப் அமர்ந்து வந்தார்கள். ஹஜ் மற்றும் உம்ராவுக்கான வழிமுறைகளை நிறைவேற்றி வந்தார்கள். பர்தாவைக் கடைபிடித்தவாறு முஸ்லிம்களின் அறிவுரீதியான மற்றும் மார்க்கம் சம்மந்தமான கேள்விகளுக்கு பதிலளித்து

வந்தார்கள். முஸ்லிம்களுடன் தோளோடு தோளாகப் போரில் பங்கெடுத்து வந்தார்கள்.

ஆக, நேரத்தின் அருமையைக் கருத்திற் கொண்டு இரண்டு சம்பவங்கள் மட்டும் கூறப்படுகின்றன:

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உஹுது போரன்று மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட்டு விலகிச் சென்று விட்டபோது, நான் பார்த்தேன்! ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மகள் ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் மற்றும் உம்மு ஸுலைம் அவர்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகிய இருவரும் தண்ணீர்ப் பையைத் தமது முதுகில் சுமந்தவாறு கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தாகித்த மக்களின் வாயில் ஊற்றுவார்கள். பிறகு, திரும்பிச் சென்று விடுவார்கள். அவற்றை நிரப்புவார்கள். பிறகு, வருவார்கள். அவற்றைத் தாகித்தவர்களின் வாயில் ஊற்றுவார்கள்."

ஹஸ்ரத் ரபீஃ பின்த் முஅவ்வஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போருக்குச் சென்று வந்தோம். தண்ணீர் அருந்தச் செய்து வந்தோம். காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளித்து வந்தோம். காயமுற்றவர்களையும் கொலையுண்டவர்களையும் மதீனாவுக்குத் தூக்கிக் கொண்டு வந்தோம்.

தற்போது சமீபத்திலேயே ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத் -தின் நிலைமைகளை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

"ஒரு போரில் சில முஸ்லிம் பெண்களை எதிரிப்படை சிறைபிடித்து விட்டது. அவர்களில் ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அந்த முஸ்லிம் பெண்களில் பெரும்பாலார் வீரமுள்ளவர்களாகவும், குதிரை சவாரி செய்வதில் அனுபவசாலிகளாகவும் எல்லா வகையான போர்களை அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் தங்களுக்குள் ஒன்று கூடினார்கள். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் அவர்களைப் பார்த்து, உத்வேகத்தையும் தன்மானத்தையும் ஊட்டினார்கள். சுய மரியாதையை மேலோங்கச் செய்தார்கள்.




அவர்கள் கூடாரங்களின் தூண்களின் உதவியுடன் இரும்புச் சங்கிலிகளின் இணைப்பைப் போன்று எதிரி மீது தாக்குதல் தொடுத்தார்கள். ரோமானியார்கள் இந்தப் பெண்களின் துணிவையும் வீரத்தையும் பார்த்து வியந்து போயினர். இதற்கிடையிலேயே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தலைமையிலான முஸ்லிம் படை அங்கு வந்தடைந்து, எதிரிகள் தோல்வியைத் தழுவ நேரிட்டது." (ஆதாரம் ஜுமுஆ பேருரை செப்டம்பர் 2, 2022)

இதுதான் இஸ்லாமிய பர்தாவை அணிந்திருந்த முஸ்லிம் பெண்களின் வீரமாக இருந்தது. இஸ்லாமிய பர்தா முஸ்லிம் பெண்ணின் முன்னேற்றத்தில் தடையாக இருக்கிறது என்று கூறும் இஸ்லாத்தின் அந்த எதிரிகளுக்கு இது பதிலாகும்.

அல்ஹம்துலில்லாஹ்! தற்காலத்திலும் அஹ்மதி பெண் பிள்ளைகளும் பெண்களும் இஸ்லாமிய பர்தாவில் இருந்தவாறு உயர்க்கல்வி கற்கிறார்கள். 'லஜ்னா இமாயில்லாஹ்' அமைப்பு இதற்கான உயரிய உதாரணமாகும்.

### இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவம் குறித்து ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டல்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமிய பர்தாவின் பலன்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்து கூறுகிறார்கள்:

"இந்தக் கருத்தை மேற்கொண்டு திற(ந்து எடுத்துரை)க்க வேண்டிய தேவை இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனெனில், இப்போது பெரும்பாலான மக்கள் இந்தக் கட்டளையின் முக்கியத்துவத்தை, அதாவது, பர்தாவின் முக்கியத்துவத்தைப் புரிவதில்லை என்பது சில கடிதங்களிலிலிருந்து தெரிய வருகிறது.

'இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத் -திற்குப் பர்தா மட்டுமே அவசியமா? இஸ்லாத்தின் முன்னேற்றம் பர்தாவை மட்டுமே சார்ந்துள்ளதா?' என்று யாராவது ஒருவர் கேட்டு விடுகிறார்.

பலர், 'இவை வழக்கற்று போன விஷயங்கள், பழைய விஷயங்கள். அவற்றில் மூழ்கக் கூடாது. காலத்திற்கேற்ப செல்ல வேண்டும்' என்று கூற ஆரம்பித்து விடுகின்றனர். இது போன்ற மக்களின் எண்ணிக்கை ஜமாஅத்தில் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆயினும், கால ஓட்டத்தில் சேர்ந்து ஓடும் அச்சத்தினால் உள்ளத்தில் வேதனை ஏற்படுகிறது. இந்த சாதாரண விஷயத்தையும் சாதாரணமான -தாகக் கருதக் கூடாது.

இத்தகைய மக்களுக்கு நான் அளிக்கும் ஒரு பதில் என்னவென்றால், எந்தப் பணியை செய்யுமாறு அல்லது செய்யக் கூடாது என்று அல்லாஹ் நமக்குக் கட்டளை

இட்டுள்ளானோ, மேலும், அந்த முழுமையான, நிறைவான மறையில் எதைக் குறித்து கட்டளை வந்து விட்டதோ, செய்ய வேண்டிய செய்யக் கூடாத எந்த விஷயங்கள் குறித்து, இது சரியான இஸ்லாமிய போதனை என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்குக் கூறிவிட்டார்களோ, பிறகு, இப்போது இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் அத்துடனேயே இணைந்துள்ளது. அதை சிறியதாகக் கருதினாலும் சரி! கருதாவிட்டாலும் சரி!

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கிய இந்தக் கடைசி ஷரீஅத் மறையின் போதனைகள் வழக்கற்றதாகவும் பழையதாகவும் ஒருபோதும் ஆகவே முடியாது. எனவே, எவர்களின் உள்ளங்களில் இத்தகைய சிந்தனைகள் வருகின்றனவோ அவர்கள் தம்மை சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். இஸ்தி∴க்∴பார் செய்யுங்கள்." (குத்பாத்தே மஸ்ரூர், தொகுதி 2, பக்கம் 85,86)

இந்த வசனங்களில் எந்த விஷயங்கள் பற்றி கூறப்பட்டுள்ளதோ அவற்றை நான் மேற்கொண்டு திறந்து கூறுகிறேன். எல்லாவற்றிற்கும் முதலாக ஆண்களுக்குக் இவ்வாறு கட்டளை உள்ளது:



பார்வையைத் தாழ்த்தி வையுங்கள். அதாவது, எதைப் பார்ப்பதற்குத் தடையோ அதைப் பார்ப்பதை விட்டும் உங்களுடைய கண்களைத் தடுத்துக் கொள்ளுங்கள். அதாவது, தேவையில்லாமல் அந்நிய பெண்களைப் பார்க்காதீர்கள். பார்வையை உயர்த்திய வண்ணம் சுற்றித் திரியும் போது, பிறகு, ஆர்வத்தில் கண்கள் பின்தொடர ஆரம்பித்து விடுகின்றன.

எனவேதான், பார்வையைத் தாழ்த்தி நடங்கள் என்று திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. இந்த நோயிலிருந்து தப்பிப்பதற்காகவே ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், 'அரைக்கண்களைத் திறந்து நடங்கள்' என்று கூறுகிறார்கள். அதாவது, கண்களைப் பாதி திறந்தவாறு நடங்கள். வழிகளில் கண்களை முழுமையாக அகலத் திறந்தவாறு நடக்காதீர்கள்.

ஒருவர் மற்றவர் மீது மோதும் அளவுக்கு மூடியும் இருக்கக் கூடாது. ஆனால், ஒரு பொருளின் மீது பார்வைபட்ட பிறகு அதைப் பார்த்துக் கொண்டே செல்லும் விதத்தில், ஆர்வத்தால் பின்பற்றும் பார்வை இல்லாத அளவுக்குத் திறந்திருக்க வேண்டும்.

எவ்வாறு பார்வையை செலுத்த வேண்டும் என்பதை அடுத்து ஹதீஸ் மூலமாக விளக்கிச் சொல்வேன். ஆனால், அதற்கு முன் அல்லாமா தபரீ அவர்களின் கூற்றை எடுத்துரைக்கிறேன். அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் எந்தெந்தப் பொருள்களைப் பார்ப்பதை விட்டும் தடுத்துள்ளானோ அந்த அனைத்தையும் பார்ப்பதிலிருந்து தங்களது பார்வையைத் தடுத்துக் கொள்வதுதான் பார்வையைத் தாழ்த்தி வையுங்கள் என்பதன் பொருளாகும்." (த∴ப்ஸீருத் தபரீ தொகுதி 18 பக்கம் 116,117)

அல்லாஹுத்தஆலா முஸ்லிம்கள், நம்பிக்கை கொண்டவர்கள் எனப்படும் ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருக்குர்ஆனின் ஒவ்வொரு போதனைப்படியும், அதற்கான உரிமைக்கு ஏற்றவாறு அமல் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்கிக் கொண்டே செல்வானாக! இதிலேயே அவர்களுக்கு ஈருலகிற்கான நன்மையும் வெற்றியும் இருக்கின்றன.

வஆகிரு த∴வானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

## திருமணம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் பற்றி இவ்வாறு கூறினார்கள்: இளைஞர் கூட்டமே! உங்களில் திருமணம் செய்ய ஆற்றல் உள்ளவர் திருமணம் செய்ய வேண்டும். ஏனென்றால் இது கண்களைத் தாழ்த்திக் கொள்வதற்கான வழியாகும்; உடல் பரிசுத்தத்திற்கான வழியாகும். மேலும் ஆற்றல் இல்லாதவர் நோன்பு நோற்க வேண்டும். இது அவருக்குரிய கேடயமாகும். (புகாரி, முஸ்லிம்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருமணம் தொடர்பாகக் கூறுகிறார்கள்: நிக்காஹ் (திருமணம்) செய்யும் நோக்கங்களில், இந்தத் திருமணம் இறைவனை நினைவு கூரக்கூடிய இறையடியார்கள் பிறக்க வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாக வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நோக்கமாக, கணவன் மனைவியின் மூலமாகவும் மனைவி கணவனின் மூலமாகவும் தீய பார்வை மற்றும் தீய செயலிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதையும் அல்லாஹ் வைத்துள்ளான்.

(சஷ்மயே மஃரிஃபத் பக்கம் 279)

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுஃப்

7

“எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளிலிருந்து ஒரு சிறிய கட்டளையையும் விட்டு விடுவாரோ அவர் தனது கரங்களால் ஈடேற்றத்தின் வாசலை அடைத்து விடுகிறார்.” – ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

### 51. துஆவின் மூலமாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ ۚ
إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (அல் பகரா 2:154)

وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ ۚ

மேலும் பொறுமை, தொழுகை ஆகியவை மூலம் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். (அல் பகரா 2:46)

### 52. அல்லாஹ்விடம் உதவி கோருவதில் உறுதியாக நிலை நிற்றல்

قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ اسْتَعِينُوا بِاللَّهِ وَاصْبِرُوا ۖ

(இதற்கு) மூஸா தமது சமுதாயத்தினரிடம், நீங்கள் அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். மேலும் பொறுமையைக் கடைபிடியுங்கள் என்று கூறினார். (அல் அஃராஃப் 7:129)

### 53. இறை அருளை வேண்டுவது

وَاسْأَلُوا اللَّهَ مِنْ فَضْلِهِ ۚ

நீங்கள் அல்லாஹ்விடம் (மட்டும்) அவனுடைய அருளினைக் கேளுங்கள். (அந்நிஸா 4:33)

❖❖ அந் நஹ்ல் 16:15, பனீ இஸ்ராயீல் 17:13

### 54. இறைவனை அணுகும் வழியினைத் தேடுங்கள்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَابْتَغُوا إِلَيْهِ الْوَسِيلَةَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், அவனை அணுகும் வழியினைத் தேடுங்கள். (அல் மாயிதா 5:36)

كَلَّا ۖ لَا تُطِعْهُ وَاسْجُدْ وَاقْتَرِبْ

சிரம் பணிந்து வணங்கி, (இறைவனை) நெருங்கிக் கொண்டிருப்பீராக. (அல் அலக் 96:20)

### 55. அல்லாஹ்வின் பெருமையைப் போற்றுவது

وَكَبِّرْهُ تَكْبِيرًا

நீர் அவனுடைய பெருமையைப் போற்றிப் புகழ்க. (பனீ இஸ்ராயீல் 17:112)

وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَىٰ مَا هَدَاكُمْ

அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனின் பெருமையை எடுத்துரையுங்கள். (அல் பகரா 2:186)

وَرَبَّكَ فَكَبِّرْ

மேலும் உமது இறைவனை மேன்மைப்படுத்துவீராக. (அல் முத்தஸிர் 74:4)

❖❖ அல் ஹஜ் 22:38

### 56. அல்லாஹ்வின் மதிப்பும் அந்தஸ்தும்


وَمَا قَدَرُوا اللَّهَ حَقَّ قَدْرِهِ

அவர்கள் அல்லாஹ்வை அவனது மதிப்பிற்கேற்றவாறு மதிப்பதில்லை. (அஸ்ஸுமர் 39:68)

### 57. மகிமை மிக்க இறைவனின் தூய்மையைப் போற்றுதல்

فَسَبِّحْ بِاسْمِ رَبِّكَ الْعَظِيمِ

எனவே நீர் மகிமை மிக்க உமது இறைவனின் பெயரைக் கொண்டு அவனது தூய்மையினை எடுத்துரைப்பீராக. (அல் வாக்கிஆ 56:75)




سَبِّحِ اسْمَ رَبِّكَ الْأَعْلَى

மிக்க மேன்மைக்குரிய உமது இறைவனுடைய பெயரின் தூய்மையினை எடுத்துரைப்பீராக. (அல் அஃலா 87:2)

❖❖ அல் வாக்கிஆ 56:97, அல் ஹாக்க 69:53, அஸ்ஸபா 34:11

### 58. காலை மற்றும் மாலையில் இறைவனின் தூய்மையை எடுத்துரைத்தல்

وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوعِ الشَّمْسِ وَقَبْلَ غُرُوبِهَا ۖ
وَمِنْ آنَاءِ اللَّيْلِ فَسَبِّحْ وَأَطْرَافَ النَّهَارِ لَعَلَّكَ تَرْضَىٰ

மேலும் சூரியன் தோன்றுவதற்கு முன்னரும், அது மறைவதற்கு முன்னரும் உமது இறைவனைப் புகழ்ந்து அவனது தூய்மையினை எடுத்துரைப்பீராக. இரவின் பல்வேறு நேரங்களிலும், பகலின் எல்லைகளிலும் அவனது தூய்மையினை எடுத்துரைப்பீராக. இதனால் நீர் (அவனது அருளைப் பெற்று) மகிழ்ச்சியடையலாம். (தாஹா 20:131)

وَّسَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا

மேலும் நீங்கள் காலையிலும், மாலையிலும் அவனது தூய்மையினை எடுத்துரைத்துக் கொண்டிருங்கள். (அஹ்ஸாப் 33:43)

وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ

மேலும் மாலையிலும், காலையிலும் உமது இறைவனைப் புகழ்வதுடன் (அவனது) தூய்மையினை எடுத்துரைப்பீராக. (அல் மு.்.மின் 40:56)

وَاذْكُرْ رَّبَّكَ كَثِيْرًا وَّ سَبِّحْ بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ

மேலும் மாலையிலும், காலையிலும் உம் இறைவனுடைய தூய்மையை எண்ணி (அவனை) நினைவு கூருவீராக என்பதே உமக்குரிய கட்டளை என்று கூறினான். (ஆல இம்ரான் 3:42)

❖❖ அல் அன்பியா 21:21, அல் .்.புர்கான் 25:59, அர் ரூம் 30:19, ஸாது 38:18-20, கா.்.ப் 50:40-41, அத் தூர் 52:49, அல் கலம் 68:29, அத் தஹ்ர் 76:26-27, அல் ஹிஜ்ர் 15:99, மர்யம் 19:12, அல் .்.பத்ஹ் 48:10

### 59. இறைவனின் தூய்மையை எடுத்துரைப்பதினாலும் அவனைப் புகழ்வதனாலும் சோர்வு அடையாமல் இருத்தல்

فَاِنِ اسْتَكْبَرُوْا فَالَّذِيْنَ عِنْدَ رَبِّكَ يُسَبِّحُوْنَ لَهٗ
بِالَّيْلِ وَالنَّهَارِ وَهُمْ لَا يَسْـَٔمُوْنَ

ஆனால் அவர்கள் கர்வம் கொண்டு திரும்பினால், உமது இறைவனிடத்திலுள்ளவர்கள் இரவும், பகலும் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றனர் அவர்கள் ஒருபோதும் சோர்வடைவதில்லை (என்பதை நினைவில் கொள்ளட்டும்). (ஹாமீம் அஸ் ஸஜ்தா 41:39)

### 60. அல்லாஹ்வை நினைவு கூருதல்

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوا اللّٰهَ ذِكْرًا كَثِيْرًا

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை மிக அதிகமாக நினைவு கூருங்கள். (அல் அஹ்ஸாப் 33:42)

وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ

நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள். (அல் அன்.்.பால் 8:46)

وَاذْكُرْ رَّبَّكَ فِىْ نَفْسِكَ تَضَرُّعًا وَّخِيْفَةً وَّدُوْنَ الْجَـهْرِ
مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْاٰصَالِ وَلَا تَكُنْ مِّنَ الْغٰفِلِيْنَ

நீர் உம்முடைய இறைவனை பணிவுடனும், அச்சத்துடனும் உம்முடைய உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருப்பீராக. மெதுவான குரலில் காலையிலும் மாலை நேரங்களிலும் (அவ்வாறே செய்து கொண்டிருப்பீராக). மேலும் ஒருபோதும் கவனமற்றவர்களைச் சார்ந்தவராக இருக்க வேண்டாம். (அல் அ.்.ரா.்.ப் 7:206)



فَاذْكُرُوْنِىْۤ اَذْكُرْكُمْ

எனவே, நீங்கள் என்னை நினைவு கூருங்கள். நானும் உங்களை நினைவு கூருவேன். (அல் பகரா 2:153)

وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ

நிச்சயமாக அல்லாஹ்வை நினைவு கூருவது (ஏனையவற்றை விட) பெரிது. (அல் அன்கபூத் 29:46)

❖❖ அல் பக்கரா 2:199, ஆல இம்ரான் 3:42,192 அல் அ.்.லா 87: 15,16

### 61. வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூருதல்

وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ

நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூருங்கள். (அல் ஜுமுஆ 62:11)

### 62. மூதாதையர்களை நினைவு கூருவது போன்று, அல்லது அதைவிடவும் அதிகமாய் அல்லாஹ்வை நினைவு கூருதல்

فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ

உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூருவது போன்று, அல்லது அதைவிடவும் அதிகமாய் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். (அல் பகரா 2:201)

❖❖ அல் மாயிதா 5:105

### 63. மகிழ்ச்சி மற்றும் துன்பம் ஆகிய இரு நிலையிலும் அல்லாஹ்வை நினைவு கூருதல்

وَاِذَا مَسَّ الْاِنْسَانَ ضُرٌّ دَعَا رَبَّهٗ مُنِيْبًا اِلَيْهِ ثُمَّ اِذَا خَوَّلَهٗ
نِعْمَةً مِّنْهُ نَسِىَ مَا كَانَ يَدْعُوْۤا اِلَيْهِ مِنْ قَبْلُ
وَجَعَلَ لِلّٰهِ اَنْدَادًا لِّيُضِلَّ عَنْ سَبِيْلِهٖ
قُلْ تَمَتَّعْ بِكُفْرِكَ قَلِيْلًا اِنَّكَ مِنْ اَصْحٰبِ النَّارِ

மனிதனுக்கு ஏதாவது ஒரு துன்பம் ஏற்படும் போது, அவன் (தான் செய்த பாவத்திற்காக மனம் வருந்தி) தன் இறைவனிடம் திரும்பியவாறு அவனை அழைக்கின்றான். பின்னர் அவன் தன்னிடமிருந்து ஓர் அருளை அவனுக்கு வழங்கி விட்டால், முன்னர் அவன் எதற்காக வேண்டுதல் செய்து வந்தானோ அதனை மறந்து (மக்களை) அல்லாஹ்வின் வழியிலிருந்து தவறான வழியில் நடத்திச் செல்வதற்காக அவனுக்கு இணைகளை ஏற்படுத்துகின்றான். நீர் கூறுவீராக: உமது நிராகரிப்பினால் சிறிது பயன் பெறுவீராக. நிச்சயமாக நீர் நரகத்திற்குரியவராவீர். (அஸ் ஸுமர் 39:9)

وَاِذَا مَسَّ الۡاِنۡسَانَ الضُّرُّ دَعَانَا لِجَنۡۢبِهٖۤ اَوۡ قَاعِدًا اَوۡ قَآئِمًا ‌ۚ فَلَمَّا كَشَفۡنَا عَنۡهُ ضُرَّهٗ مَرَّ كَاَنۡ لَّمۡ يَدۡعُنَاۤ اِلٰى ضُرٍّ مَّسَّهٗ‌ ؕ كَذٰلِكَ زُيِّنَ لِلۡمُسۡرِفِيۡنَ مَا كَانُوۡا يَعۡمَلُوۡنَ

ஒரு மனிதனுக்கு ஏதாவதொரு பெருந்துன்பம் ஏற்படும்போது அவன் ஒருக்கணித்து(ப் படுத்து)க் கொண்டோ, உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ நம்மை அழைக்கின்றான். பின்னர் நாம் அவனது துன்பத்தை அவனை விட்டும் நீக்கிவிட்டால், அவனுக்கு ஏற்பட்ட எந்த (ஒரு) துன்பத்தி(னை அகற்றுவத)ற்காகவும் அவன் நம்மை ஒருபோதும் அழைத்திராததைப் போன்று சென்று விடுகின்றான். இவ்வாறே வரம்பு மீறி நடப்பவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருப்பவை அழகுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. (யூனுஸ் 10:13)

وَاِذَاۤ اَنۡعَمۡنَا عَلَى الۡاِنۡسَانِ اَعۡرَضَ وَنَاٰ بِجَانِبِهٖ‌ۚ وَاِذَا مَسَّهُ الشَّرُّ فَذُوۡ دُعَآءٍ عَرِيۡضٍ

நாம் மனிதருக்கு (ஏதேனும்) ஓர் அருளை வழங்கினால், அவன் புறக்கணித்துத் திசைமாறி விடுகிறான். ஆனால், அவனுக்கு (ஏதேனும்) தீங்கு ஏற்பட்டால், மிகவும் நீண்ட வேண்டுதல் செய்கிறான். (ஹாமீம் அஸ்ஸஜ்தா 41:52)

فَاَمَّا الۡاِنۡسَانُ اِذَا مَا ابۡتَلٰٮهُ رَبُّهٗ فَاَكۡرَمَهٗ وَنَعَّمَهٗ ۙ فَيَقُوۡلُ رَبِّىۡۤ اَكۡرَمَنِ ؕ وَاَمَّاۤ اِذَا مَا ابۡتَلٰٮهُ فَقَدَرَ عَلَيۡهِ رِزۡقَهٗ ۙ فَيَقُوۡلُ رَبِّىۡۤ اَهَانَنِ ۚ

மனிதனைப் பொறுத்தவரை, அவனுடைய இறைவன் அவனைச் சோதித்து, அவனுக்குக் கண்ணியமளித்து, அவனுக்கு அருள் செய்யும் போது, என் இறைவன் என்னைக் கண்ணியப்படுத்தியுள்ளான் என்று அவன் கூறுகின்றான்.

ஆனால், அவன் அவனைச் சோதித்து, அவனது வாழ்விற்குரியவற்றை அவனுக்குக் குறைவாகக் கொடுக்கும் போது, என் இறைவன் என்னை இழிவுபடுத்தியுள்ளான் என்று அவன் கூறுகின்றான். (அல் ∴பஜ்ர் 89:16-17)

❖❖ அல் ஹஜ் 21:12, அர் ரூம் 30:34-35, அஸ் ஸுமர் 39:50, ஹாமீம் அஸ்ஸஜ்தா 41:50-51, அஷ் ஷூரா 42:49, அல் அன்கபூத் 29:66, பனீ இஸ்ராயீல் 17:84

64. ரஹ்மானாகிய (அளவற்ற அருளாளனாகிய) இறைவனை நினைவு கூர்வதை புறக்கணிக்கக் கூடாது

وَمَنۡ يَّعۡشُ عَنۡ ذِكۡرِ الرَّحۡمٰنِ نُـقَيِّضۡ لَهٗ شَيۡطٰنًا فَهُوَ لَهٗ قَرِيۡنٌ

அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னை நினைப்பதைப் புறக்கணித்து விடுபவனுக்கென்று ஒரு ஷைத்தானை நாம் ஒதுக்கிக் கொடுத்து விடுகின்றோம். இவன், அவனுடைய கூட்டாளியாக எப்போதும் இருப்பான். (அஸ் ஸுக்ரு∴ப் 43:37)

وَمَا يَاۡتِيۡهِمۡ مِّنۡ ذِكۡرٍ مِّنَ الرَّحۡمٰنِ مُحۡدَثٍ اِلَّا كَانُوۡا عَنۡهُ مُعۡرِضِيۡنَ

அவர்களிடம் அளவற்ற அருளாள(னான இறைவ)னிடமிருந்து புதியதொரு போதனை எப்பொழுது வந்தாலும், அவர்கள் அதனைப் புறக்கணிக்காமல் இருந்ததில்லை. (அஷ்ஷுஅரா 26:6)

وَمَنۡ اَعۡرَضَ عَنۡ ذِكۡرِىۡ فَاِنَّ لَهٗ مَعِيۡشَةً ضَنۡكًا

என்னை நினைவு கூர்வதிலிருந்து விலகி விடுபவருக்கு அவருடைய வாழ்க்கை துன்பமானதாகவே இருக்கும். (தாஹா 20:125)

وَمَنۡ يُّعۡرِضۡ عَنۡ ذِكۡرِ رَبِّهٖ يَسۡلُكۡهُ عَذَابًا صَعَدًا ۙ

எவன் தன் இறைவனை நினைப்பதைப் புறக்கணிக்கின்றானோ அவனை, அடக்கி விடக்கூடிய கடினமான தண்டனையில் அவன் தள்ளுவான். (அல் ஜின்னு 72:18)


65. மறதிக்குப் பிறகும் இறைவனை நினைவு கூர்வது நேர்வழிக்கான காரணியாக அமைகின்றது

وَاذۡكُرْ رَّبَّكَ اِذَا نَسِيۡتَ وَقُلۡ عَسٰٓى اَنۡ يَّهۡدِيَنِ رَبِّىۡ لِاَقۡرَبَ مِنۡ هٰذَا رَشَدًا

நீர் மறந்து விட்டால், உமது இறைவனை நினைவுகூர்ந்து, நேர்வழி பெறுவதற்கு இதை விட மிகவும் சமீபமான ஒரு பாதையில் என் இறைவன் என்னை நடத்திச் செல்வான் என்ற நம்பிக்கை (எனக்கு) உண்டு என்று கூறுக. (அல் கஹ்∴ப் 18:25)

(தொடரும்...)





# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

24

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

'மஹ்தி' என்ற சொல்லுக்கு 'நேர்வழி காட்டப்பட்டவர்' என்று பொருள். மேலும் எல்லா வழிகாட்டல்களும் அல்லாஹ்-விடமிருந்தே பெறப்படுவதால் அச்சொல் இறைவனால் வழி காட்டப்பட்ட ஒருவர் என்று பொருள்படலாயிற்று.

"மஹ்தி என்பது நபி பெருமானார் (ஸல்) அவர்களால் இறுதிக் காலத்தில் தோன்றுவார் என்று நற்செய்தி கூறப்பெற்ற ஒருவரது பெயராகக் கூறப்பட்டது." (இஸ்லாமிய கலைக் களஞ்சியம்)

'மஸீஹ் அல்லாமல் வேறு மஹ்தியில்லை' என்ற நபிமொழியைப் பதிவு செய்வதன் மூலம் இப்னு மாஜா இந்த விஷயத்தைத் தெளிவாக்கி விட்டார். முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

அபுஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் உயிரோடு இருப்பவர் ஈஸப்னு மர்யமைக் காண்பார்; அவர் மஹ்தியாகவும் மஸீஹாகவும் நீதி நெறி தீர்ப்பவருமாக இருப்பார்; சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார்."

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த வார்த்தை-களிலிருந்து அவர்கள் குறிப்பிடுவது ஒருவரின் தோற்றத்தைப் பற்றியே என்பதும் அவருக்கு (ஈஸா. மஹ்தி என) இரண்டு பெயர்கள் இருக்கும் என்பதும் தெளிவாகிறது.

இமாம் மஹ்தி என்பவர் முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹைத் தவிர வேறு யாருமில்லை என்ற உண்மையை நிறுவிய பின்னர் இப்போது நாம் மஸீஹின் தோற்றத்தைப் பற்றி அறிவிக்கும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளின் பக்கம் திரும்புவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபிமொழி ஒன்றை ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் மூலமாக இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

"என்னுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக. நிச்சயமாக ஈஸப்னு மர்யம் உங்கள் மத்தியில் தோன்றி (உங்களாடு இருப்பார்). அவர் நீதி நெறி தீர்ப்பவராக விளங்குவார். அவர் சிலுவையை முறிப்பார். (கிறித்தவக் கோட்பாடுகளைப் பகுத்தறிவாலும் வாதங்-களாலும் முறியடிப்பார் - அயனீ எழுதிய புகாரியின் விரிவுரை); மேலும் பன்றியைக் கொல்வார்; போரை ஒழிப்பார்; செல்வம் பெருகும்; ஆனால் வாங்குவதற்கு ஆள் இருக்காது. ஒற்றை ஸஜ்தா முழு உலகத்தை விடவும் அதிலுள்ள அனைத்தை விடவும் மேலானதாக இருக்கும்.

இரண்டு விஷயங்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

(அ) மஸீஹின் வருகையைக் குறிக்கப் பெருமானார் (ஸல்) அவர்கள் 'நஸல' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். கிறித்தவர்களும் பிற்கால முஸ்லிம்களும் அது 'அவர் உயரமான ஓரிடத்திலிருந்து இறங்கி வருவதைக் குறிக்கிறது' என்று கூறுகின்றனர். எனவே ஈஸா (அலை) அவர்கள் உடலோடு வானத்தில் இருந்து இறங்கி வர வேண்டும் என்று கூறுகின்றனர்.



(ஆ) பெருமானார் (ஸல்) அவர்கள், ஈஸப்னு மர்யம் இறங்கி வருவார் என்று கூறுகின்றார்கள். எனவே ஈஸா (அலை) அவர்களே நேரடியாக வர வேண்டும்; வேறு எவரும் அல்ல என்றும் கூறுகின்றனர்.

இந்த இரண்டு விஷயங்களை-யும் பெருமானார் (ஸல்) அவர்களே தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஈஸப்னு மர்யம் வந்து உங்களோடு இருக்கும் போது உங்கள் நிலை எவ்வாறு இருக்கும். அவர் உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார்.' (புகாரி)

மர்யமின் குமாரர் நீண்ட காலத்திற்கு முன்னரே இறந்து விட்டார்.

இறந்து விட்ட ஒருவர் இவ்வுலகிற்குத் திரும்பி வர முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். (21:96)

எனவே சிலுவையில் அறையப்பட்ட அதே மர்யமின் மகன் மீண்டும் வருவதைப் பற்றிப் பெருமானார் (ஸல்) குறிப்பிட்டிருக்க முடியாது என்பது தெளிவானதாகும். மேலும் ‘அவர் உங்கள் மத்தியிலிருந்து தோன்றுவார்’ என்று கூறியதன் மூலம் அன்னார் (ஸல்) அவர்கள் இதன் பொருளை மேலும் தெளிவாக்கி விட்டார்கள. அதாவது அவர் வானத்திலிருந்து இறங்கி வர மாட்டார்; இறந்து விட்ட அதே மர்யமின் மகனாகவும் இருக்க மாட்டார். மாறாக அவர் அக்கால முஸ்லிம்கள் மத்தியிலிருந்தே தோன்றுவார்.

வாக்களிக்கப்பட்ட அந்த இமாமே மஸீஹாகவும் இருப்பார் என்பதால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை மர்யமின் மகன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். பொதுவாக இரு நபர்களுக்கிடையே சிறப்பான ஒற்றுமை காணப்படும் போது ஒருவரின் பெயராலேயே மற்றவரும் அழைக்கப்படுவது இயல்பு. ஹிராக்ளியஸைச் சந்தித்த பின்னர் அபூ ஸுஃப்யான் தமது தோழர்களிடம் பின்வருமாறு கூறினார்.

‘நிச்சயமாக அபீ கப்ஷாவின் மகன் வெற்றி பெற்றுவிட்டார்; ஏனென்றால் பனீ அஸ்ஃபார் கூட அவரைக் கண்டு அஞ்சுகிறார்.’ (புகாரி)

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அபி கப்ஷாவின் மகன் இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இருந்தும் அபூ ஸுஃப்யான் அன்னாரை அவ்வாறு அழைக்கிறார். ஏனென்றால் அபி கப்ஷாவின் மகனைப் போன்று அன்னாரும் இறைவனின் ஏகத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

‘நஸல’ என்ற சொல் ‘அவர் இறங்கினார்’ என்று பொருள் படும் என்றாலும் ‘அவர் தன் உடலோடு வானத்திலிருந்து இறங்கினார்’ என்பதைக் குறிக்காது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இதற்கான எந்த விதமான நியாயமும் இல்லை. அதே வார்த்தை பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையைக் குறித்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

“நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு நினைவூட்டக் கூடிய ஒரு(தூது)வரை அனுப்பியுள்ளான்.

அத்தூதர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களை (எல்லா வகையான) இருள்களிலிருந்து(ம்) ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக அல்லாஹ்வின் தெளிவான வசனங்களை உங்களுக்கு ஓதிக் காட்டுகின்றார்.” (திருக்குர்ஆன் 65:11,12)

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் ‘உடலோடு வானத்திலிருந்து இறங்கி வந்தார்கள்’ என்று எவரும் கூற மாட்டார். இறைவன் மேலும் கூறுகிறான்: ‘இரும்பையும் நாம் உங்களுக்கு இறக்கினோம்’. (திருக்குர்ஆன் 57:26)


ஆனால் அது வானத்திலிருந்து தூக்கி எறியப்பட -வில்லை என்பதை நாம் அறிவோம்.

ஒரு கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்: ‘நான் வந்து முஹல்லபின் மக்களோடு குளிர் காலத்தில் ஒரு விருந்தாளி -யாகத் தங்கி இருந்தேன்; பஞ்ச காலத்தில் நான் ஓர் அந்நியனாக இருந்தேன்.’

இங்கு ‘நஸலத்’ என்பதற்கு ‘நான் வந்து ஒரு விருந்தாளியாகத் தங்கி இருந்தேன்’ என்பது பொருளாகும்.

‘அன்ஸல’ என்றால், அவர் இறங்கி நின்றார் அல்லது ஓரிடத்தில் தங்கினார் அல்லது வாழ்விடம் ஆக்கிக் கொண்டார் அல்லது வசித்தார் அலலது நிலைபெற்றார். (லேன் அகராதி)

தமது வருகை திருக்குர்ஆனில் முன்னறிவிக்கப் -பட்டிருப்பதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விளக்கிக் கூறினார்கள். (சூரா ஃபாத்திஹா; அந்நூர் 24:56, அல் முஸ்ஸம்மில் 73:16).




திருக்குர்ஆனின் கீழ்க்கண்ட வசனம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

“மர்யமின் மகன் ஈஸா தன் சமுதாயத்தினரிடம், இஸ்ராயீலின் மக்களே! நிச்சயமாக நான் எனக்கு முன்னர் தவ்ராத்தில் கூறப்பட்டதை நிறைவேற்றக் கூடியவனாகவும் எனக்குப் பின்னர் வரப்போகின்ற அஹ்மது என்னும் பெயரைக் கொண்ட ஒரு தூதரைப் பற்றி நற்செய்தி வழங்குபவனாகவும் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவேன் என்று கூறிய நேரத்தை (நினைத்துப் பாருங்கள். பின்னர் அ(த்தூது)வர் தெளிவான சான்றுகளுடன் அவர்களிடம் வந்த போது, இது தெளிவான மந்திர வித்தையாகும் என்று அவர்கள் கூறினர்.” (திருக்குர்ஆன் 61:7)

மஸீஹின் இரண்டாவது வருகையைப் பற்றிய முன்னறிவிப்போடு, தஜ்ஜால் அல்லது அந்தி கிறிஸ்துவைப் பற்றிய முன்னறிவிப்பும் வேதங்களில் காணப்படுகிறது. மஸீஹின் வருகைக்கு முன் அந்தி கிறிஸ்து தம்மை இறைவன் என்று காட்டுவான் என்றும் அவரின் வருகையின் ஒளியால் அந்தி கிறிஸ்து அழிக்கப்படுவான் என்றும் கிறிஸ்தவர்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர். (2 தெஸலோக்கேயர் 2:4) தஜ்ஜாலைப் பற்றியும் அவனது அபரிமிதமான வேலைகளைப் பற்றியும் தஜ்ஜால் மஸீஹால் கொல்லப்படுவார் என்பது பற்றியும் நவாஸ் பின் ஸம்ஆன் (ரலி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழி ஒன்று முஸ்லிமில் இடம் பெற்றுட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பு வெளிப்படையாகவே உருவகமான கூற்றுகளால் அமைந்துள்ளது; எந்த ஓர் அறிவுள்ள மனிதரும் அவற்றை சொற்பொருளில் எடுத்துக் கொள்ள மாட்டார். இருந்த போதிலும் அதன் உண்மையான பொருளை உணர்த்தக் கூடிய தெளிவான குறிப்புகள் அதில் காணப்படுகின்றன.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘தஜ்ஜாலின் தோற்றத்தைக் காண்பவர்கள் ஸூரா அல் கஹ்ஃபின் ஆரம்ப வசனங்களை ஓத வேண்டும்; ஏனெனில் அதனை ஓதுவது அவனது ஆபத்துகளிலிருந்து உங்களைக் காக்கும். (முஸ்லிம். முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல்)

அந்த வசனங்களாவன: “அல்லாஹ்வே எல்லாப் புகழுக்கும் உரியவன். அவன் (இந்த) வேதத்தைத் தன் அடியாரிடத்து இறக்கினான்...

அல்லாஹ் தனக்கென ஒரு மகனைக் கொண்டுள்ளான் என்று கூறுபவரை இது எச்சரிக்கையும் செய்கிறது.

அவர்களுக்கும் அவர்களின் மூதாதையர்களுக்கும் இது பற்றி எவ்வித ஞானமும் இல்லை. அவர்களின் வாய்களில் இருந்து வெளிவரும் இச்சொல் மிகவும் அபாயகரமான கூற்றாகும். அவர்கள் பொய்யையே கூறுகின்றனர்.'' (திருக்குர்ஆன் 18:5-6)

இங்கு குறிப்பிடப்படுவது இயேசுவே (அலை) இறைவனின் ஒரே மகன் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் இக்காலக் கிறித்தவர்களைப் பற்றியே என்பது தெளிவாகும். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஆதம் (அலை) அவர்களின் படைப்புக்கும் இறுதி நாளுக்கும் இடையில் தஜ்ஜாலின் ஆபத்தை விடப் பெரிய ஆபத்து வேறொன்றும் இல்லை.' (முஸ்லிம்)

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள மிகப் பெரிய அபாயம் என்னவென்றால், 'அதனால் வானங்கள் வெடித்து விடவும் பூமி பிளந்து (பல) துண்டுகளாகி விடவும் மலைகள் தூள் தூளாகி வீழ்ந்தும் விடலாம். ஏனெனில் அவர்கள் அளவற்ற அருளாள-(னான இறைவ)னுக்கு ஒரு மகனை ஏற்படுத்துகின்றனர்.' (திருக்குர்ஆன் 19:91,92)

இங்கும் சிலுவைக் கொள்கையைக் கொண்டுள்ள மக்களையே குறிக்கிறது. அரபி அகராதிகளும் தஜ்ஜால் என்பது ஒரு குறிப்பிட்ட மக்களைக் குறிக்கும் என்ற முடிவை ஆதரிக்கின்றன. 'தஜ்ஜால்' என்ற சொல்லுக்கு 'மொத்தமாகப் பயணம் செய்து தங்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தால் பூமியை நிறைக்கும் பெரும் மனிதக் கூட்டம் அல்லது பொருட்களை சுமந்த வண்ணம் ஒன்று சேர்ந்து பயணிக்கும் மனிதக் கூட்டம்' என்று பொருள்படும். (லேன் என்னும் அரபி அகராதி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: 'தஜ்ஜால் மக்கா மதீனாவைத் தவிர உலகெங்கும் பரவுவான்.' (புகாரி)

ஐரோப்பாவின் கிறிஸ்தவ சமுதாயம் உண்மையிலேயே உலகம் முழுவதும் பரவி விட்டது. அவர்கள் இயேசுவின் எளிமையான போதனையைச் சிதைத்து விட்டனர். அவர்களுடைய பிரச்சாரகர்கள் சிலுவைக் கொள்கையை பூமியின் மீதும் கடல் மீதும் காற்றின் மீதும் அற்புதமான வேகத்தில் பூமியின் மூலை முடுக்கெங்கும் எடுத்துச் சென்று விட்டனர்.

ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முன்னறிவிப்புக்கு ஏற்ப இயேசுவின் சிலுவை மரணத்தை மறுத்ததின் மூலம் சிலுவையை முறித்து விட்டார்கள் என்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இயேசு (அலை) அவர்கள் சிலுவையில் மரணிக்க-வில்லை என்றும், அவர் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறி காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் இயற்கை மரணம் அடைந்தார் என்றும் அவரது கல்லறை இன்றும் அங்கிருக்கிறது என்றும் சந்தேகத்திற்கிடமின்றி அன்னார் நிரூபித்தார்கள்.

(தொடரும்...)

# வக்ஃபே ஜதீது சந்தாவின் அருள்

கினிகனாகரி என்றவொரு நாடு. அங்குள்ள நண்பர் அகோபி (Akobi) சாஹிப் கூறுகிறார்: மிஷனரி இன்சார்ஜ் எனது வக்ஃபே ஜதீது குத்பாவைப் போட்டுக் காட்டியுள்ளார். அதில் வக்ஃபே ஜதீது சந்தாவில் பணம் கொடுத்த மக்களைப் பற்றி கூறப்பட்டிருந்தது. அவர் கூறுகிறார்: அதனைக் கேட்டு என் உள்ளத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மறுநாள் நான் எனது வேலைக்காக செராலியோன் சென்றேன். பயணத்திற்கு என்னிடம் 300 டாலர்தான் இருந்தது. எனக்கு பணத்தின் பெரும் தேவை இருந்தது. இருந்தும் கூட 300 டாலரில் ஒரு 100 டாலரை எடுத்து ஒரு கவரில் போட்டு வக்ஃபே ஜதீதில் செலுத்துவதற்காக தனியாக எடுத்து வைத்தேன். இதன் பிறகு நான் வேறு பணியில் ஈடுபட்டு விட்டேன். கவரை அனுப்பவும் மறந்து விட்டேன். பேச்சு நடந்து இரண்டு மணி நேரம்தான் கழிந்திருக்கும். என் அலுவலகத்திற்கு ஒருவர் வந்தார். என்னிடம் ஒரு கவரைக் கொடுத்து கூறினார். இதனை உங்கள் இன்ன நண்பர் அனுப்பினார். நான் கவரைப் பிரித்துப் பார்த்தேன். அதில் 300 டாலர் இருந்தது. நீங்கள் பயணத்தில் செல்கிறீர்கள். செலவுக்காக தருகிறேன் என்று எழுதப்பட்டிருந்தது. உடனே எனக்கு நினைவு வந்தது. நான் சந்தாவுக்காக எடுத்து வைத்த அந்தப் பணத்தை அனுப்பவும் கூட இல்லை. அதற்குள் அல்லாஹ் அதனைப் பன்மடங்கு அதிகமாக்கி திருப்பித் தந்து விட்டான். பிறகு கூறுகிறார்: இறைவனைப் புகழ்வதில் எனது உள்ளம் நிறைந்து விட்டது. அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அன்பிற்குரிய ஜமாஅத்தில் இணைவதற்குரிய வாய்ப்பினை வழங்கியுள்ளான்.

(04.01.2018 ஜுமுஆ குத்பாவிலிருந்து...)

# 100 வருடங்களுக்கு முன்னர்...

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்புகளிலிருந்து...
## 20 மார்ச் 1922

ஜோதிடர்களைக் குறித்தும், குறி சொல்பவர்-களைக் குறித்தும் பேச்சு வந்தது. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமி ஓர் நல்லியல்புள்ள மனிதராவார்கள். அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறினார்கள். ஒரு குறி சொல்பவன் அன்னார் வாழ்ந்து வந்த பகுதிக்கு வருவதுண்டு. அவன் மக்களிடம் அவர்களது தலைவிதியைப் பற்றிக் கூறுவான். மவ்லவி சாஹிப் அவன் இவ்வாறு அங்கு வருவதைத் தடுக்க எண்ணினார்கள். எனவே அவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். அதனால் அவன் அப்பகுதிக்கு வருவதை நிறுத்த வேண்டும் என எண்ணினார்கள். ஒருநாள் அந்தக் குறி சொல்பவன் வந்தான். மவ்லவி சாஹிப் குறைவான உயரம் கொண்டவராக இருந்தார்கள்.. அவர்கள் தன்னைப் பர்தாவால் மறைத்துக் கொண்டு கையை மட்டும் வெளியே அவனிடம் காட்டி தனது தலைவிதியைக் குறித்துக் கூறுமாறு வேண்டினார்கள். குறி சொல்பவன் அவர்களை ஒரு பெண் என்று நினைத்துக் கொண்டான். அவன், "உனக்கு நற்பாக்கிய-மில்லை. வெளிநாட்டிலிருக்கும் உனது கணவர் வேறொரு பெண்ணை அங்கு திருமணம் செய்து கொண்டார். மேலும் அவர் இப்போது இங்கு திரும்பி வரவும் விரும்பவில்லை" என்று கூறினான். அதற்கு மவ்லவி சாஹிப் அழுதவாறே "அப்படியானால் இதற்கு என்ன தீர்வு உள்ளது? என்னுடைய இந்த துர்பாக்கியத்திலிருந்து வெளி வர நான் என்ன பரிகாரம் செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் சில ஆடைகள் போன்ற சில பொருட்களைக் கூறி விட்டு அவற்றை தனக்குத் தருமாறும், அவற்றைத் தந்தால் கணவர் திரும்பி வருவார். இல்லையென்றால் அவர் வரவே மாட்டார் என்றான். உடனே மவ்லவி சாஹிப் பர்தாவை முகத்திலிருந்து களைந்து விட்டு தனது நீளமான தாடியைக் காட்டினார்கள். குறி சொல்பவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "அவர் திரும்பி வரவே மாட்டாரோ?" என்று கேட்டார்கள். பெரிதும் தர்ம சங்கடத்திற்கு ஆளான அந்தக் குறி சொல்பவன் அந்தப் பகுதிக்கு மீண்டும் வரவேயில்லை. மேலும் அவர் தனது சகாக்களிடம் இது பற்றிக் கூற குறி சொல்லும் எவரும் அப்பகுதிக்கு அதன் பின்னர் செல்லவில்லை.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்.

மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை முதலில் சந்திக்கச் சென்ற சம்பவமும் சுவையானதாகும். அவர்கள் கூறினார்கள்: "நான் காதியான் சென்றேன். ஆனால் ஹுஸூர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் சென்று விட்டார்கள். எனவே நான் குர்தாஸ்பூர் சென்று அன்னார் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றேன். அதன் ஒரு பக்கத்தில் ஒரு தோட்டம் இருந்தது. மர்ஹூம் ஹாமித் அலீ சாஹிப் கதவருகே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் என்னை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. நான் தோட்டத்தின் வழியாக பதுங்கிச் சென்று கதவைச் சென்றடைந்து விட்டேன். கதவை மெல்லத் திறந்தேன். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீண்ட அடி எடுத்தவாறு வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள். உடனே நான் திரும்பி விட்டேன். மிக வேகமாக நடந்து கொண்டிருக்கும் இந்த மனிதர் நேர்மையான மனிதரே ஆவார் என்பதை அறிந்து கொண்டேன். அவர் சென்று சேர வேண்டிய இடம் கண்டிப்பாக மிகத் தொலைவில் இருக்க வேண்டும். எனவேதான் அவர் இவ்வளவு வேகமாக நடக்கிறார் எனப் புரிந்து கொண்டேன்."

(அல்ஹகம் 20 மே, 2022)

*(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

அண்ணியும் சேர்ந்து 21 ரூபாய் கொடுத்தோம் என்று கூறினார். இதனைச் சந்தாவுடன் தொடர்புபடுத்தி அன்னார் கூறுகிறார்கள். ஜமாஅத்தில் சிலர் மற்றவர்களை விட அதிகமாக சந்தா கொடுக்கின்றனர். அந்த சிறப்பான சந்தாக்களை ஒட்டுமொத்த ஜமாஅத் சந்தாவாகக் கூறுவதும் அத்தகையதுதான். அந்தக் கருமிப் பெண் நானும் எனது அண்ணியும் சேர்ந்து 21 ரூபாய் கொடுத்தோம் என்று கூறியதைப் போன்றதே ஆகும்.'' (அல் ஃபஸ்ல் 15 ஜூன் 1944, தொகுதி 32, எண்.138, பக்கம் 4)

ஆனால் சில செல்வந்தர்களும் கூட கருமியாக இருக்கின்றனர். ஒட்டுமொத்த ஜமாஅத் சந்தாவைத் தமதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த உதாரணமும் நம்முன் வருகிறது. அதில் தம்மையும் சேர்த்து சுட்டிக் காட்டாவிட்டாலும் கூட எமது ஜமாஅத் இவ்வளவு சந்தா தருகிறது என்று கூறுகின்றனர். அதே வேளையில் அந்த ஜமாஅத்தில் பெரும்பாலார் ஏழைகளாகவே உள்ளனர். அந்த ஏழைகள் தரும் அளவுக்கு செல்வந்தர்கள் சந்தா தருவதில்லை.

ஒருமுறை விளையாட்டில் சில தவறான செயல் நடந்து விட்டது. மார்க்கம் கருத்தில் கொள்ளப்படவில்லை. இயக்கத்தின் மரபுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனை எச்சரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள். சிரிப்பது மகிழ்வது அனுமதிக்கப்பட்டது தான். தடுக்கப்படவில்லை. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் நகைச்சுவையாக பேசினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நகைச்சுவையாகப் பேசினார்கள். நாமும் நகைச்சுவை செய்கிறோம். நாம் நகைச்சுவையாக பேசுவதில்லை என்று கூறவில்லை. நாம் நூறு முறை நகைச்சுவையாகப் பேசுகிறோம். நமது குழந்தைகளிடம் நமது மனைவியிடம் நமது உறவினர்களிடம் நகைச்சுவையாகப் பேசுகின்றோம். ஆனால், எவரையும் தாழ்மைப்படுத்தும் வகையில் அல்ல. (ஒருவரை தாழ்மைப்படுத்தினால் கிண்டல் செய்தால் அத்தகைய கேலி சரியில்லை.) ஒருவரை அவமானப்படுத்தும் வார்த்தை வாயிலிருந்து வந்தால் நாம் இஸ்திக்ஃபார் செய்கிறோம். இதனை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். ஒருவரைக் கிண்டல் செய்து அது அவருக்கு மிகவும் தவறாகத் தெரிந்தால் அல்லது அவரது சுயமரியாதைக்கு பங்கம் விளைவிப்பதாக இருந்தால் நம்மிடம் தவறு நிகழ்ந்ததாகக் கருத வேண்டும். இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.

எனவே, ஒரு விளையாட்டைச் சான்று காட்டி அன்னார் கூறுகின்றார்கள்: ஓரிடத்தில் விளையாட்டு நடைபெற்றது. அப்போது இந்தப் பேச்சு வந்தது. நான் விளையாட்டைத் தவறாக நினைப்பதில்லை. சிரிப்பது விளையாடுவது அனுமதிக்கப்பட்டதே ஆகும். சந்தேகமின்றி சிரியுங்கள் விளையாடுங்கள். ஆனால் விளையாடி விளையாடி, அந்த விளையாட்டு விளையாட்டாக இருந்தால் சரிதான். ஆனால், தந்தையின் தாடியுடன் விளையாடப்பட்டால் அது அனுமதிக்கப்பட்டதல்ல. அதாவது தந்தையின் கண்ணியத்தை நசுக்கினால் அதற்கு அனுமதி இல்லை. இறைவனது அந்தஸ்தை இறைவனுக்கே கொடுங்கள். கால்பந்தின் தகுதியை கால்பந்திற்கே கொடுங்கள். கவியரங்கின் அந்தஸ்தை கவியரங்கிற்கே கொடுங்கள். முன்னறிவிப்பின் தரத்தை முன்னறிவிப்பிற்குக் கொடுங்கள். (சிலர் கேலி கிண்டல் செய்யும் தொனியில் முன்னறிவிப்புகளை எடுத்துரைக்கின்றனர்.) உங்களுக்கு கேலி கிண்டல் செய்யும் ஆர்வம் இருக்கும் என்றால் லாஹூருக்குச் செல்லுங்கள். அங்குள்ள கவியரங்குகளில் சென்று கலந்து கொள்ளுங்கள். அங்கு கவிதை சொல்பவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்து கிண்டலாகவும் பேசுகின்றனர். அத்தகைய கவியரங்கங்களில் கலந்து கொண்டு உங்கள் ஆர்வத்தைத் தணியுங்கள். வீணான வார்த்தைகளைப் பேசவும் விளையாடவும் நினைத்தால் செல்லுங்கள். கவியரங்கங்களில் சென்று இணைந்து கொள்ளுங்கள். லாஹூரில் சென்று அதனை செய்வீர்கள் என்றால் குறிப்பாக காதியான் மக்களுக்கு போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: மேலும் ரப்வா மற்றும் காதியான் போன்ற இடங்களில் எங்கெல்லாம் தலைமையக அமைப்பின் கீழ் விளையாட்டுகள் நடக்கிறதோ அங்குள்ளவர்களுக்கும் அறிவுரை இருக்கிறது.

அவர்கள் கூறுகின்றார்கள்: லாஹூரில் சென்று நீங்கள் செய்வீர்கள் எனில் லாஹூர்வாசிகள் அவ்வாறு செய்தனர் என்று கூறுவர். அஹ்மதிகள் அவ்வாறு செய்தனர் என்று கூறமாட்டார்கள். ஆனால் இங்கிருந்து அதில் பத்தில் ஒரு பகுதி அளவுக்கு செய்தாலும் அஹ்மதிகள் அவ்வாறு செய்தனர் என்று மக்கள் கூறுவர். எனவே, நான் உங்களை கேலி கிண்டலிலிருந்து தடுக்கவில்லை. நான் இவ்வளவே கூறுகிறேன். ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படும் அளவிற்கு கிண்டலில் வரம்பு மீறாதீர்கள். (அல் ஃபஸ்ல் 17 மார்ச் 1952, தொகுதி 40/6, எண்.62, பக்கம் 4)

இப்போது உலகில் எல்லா இடத்திலும் காதியான் ரப்வாவில் மட்டுமல்ல. மற்ற எல்லா இடத்திலும் விளையாட்டுகள் இருக்கின்றன. அங்கு இவ்வாறு நடந்தால் ஜமாஅத்திற்கு அதனால் அவப்பெயர் ஏற்படுகிறது. எல்லா இடத்திலும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே, நமது ஒவ்வொரு செயலும் இதனை வெளிப்படுத்த வேண்டும். அது விளையாட்டாக இருந்தாலும் சரி; மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி; கவியரங்கம் ஆனாலும் சரி நாம் ஜமாஅத்தின் கண்ணியத்திற்கு பங்கம் ஏற்பட விடக் கூடாது. அந்தக் கண்ணியத்தையும் பெருமையையும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, நான் சில கருத்துகளை போதனைகளைக் கூறினேன். ஒவ்வொன்றும் தன்னகத்தே ஒரு பாடத்தைக் கொண்டவையாகும். அவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:
''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தவோர்
அடையாளத்தைக் காட்ட வந்தார்கள் என்றால்
தமது துஆவினால் உலகில் பெரும் பெரும் புரட்சிகளை
ஏற்படுத்தக் கூடிய அடியார்களை உருவாக்குவது அவர்களது
வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது.''

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam